பக்கங்கள்: 12
விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 12 செவ்வாய்க்கிழமை 28.07.2020 கதிர் 261

## இது ரகசியம் அல்ல!

'அடி மடியிலேயே கைவைப்பது' என்பார்கள். சில தரப்புகள் வேட்பாளர்களின் பிரசார உத்தியில் – ஆதரவு திரட்டும் தந்திரோபாயத்தில் – அடிமடியில் கை வைக்கும் கைங்கரியத்தை ஆரம்பித்திருக்கின்றனவாம்.

அதனால் சில பக்கம்02

## கூட்டமைப்பு வேட்பாளர்களை சந்தித்துப் பேசிய சுவிஸ் தூதர்

யாழ்ப்பாணம், ஜூலை 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர்கள் சிலரை இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் நேற்று மதியம் சந்தித்துப் பேசினார்.

நட்பினடிப் பக்கம் 02

## நேற்று மட்டும் 22 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஜூலை 28

நேற்று மட்டும் 22 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2804 ஆக உயர்ந்துள்ளது.

தற்போது 672 பேர் வைத்தியசாலை பக்கம் 02

# ஆட்சிமுறைமை மாற்றத்தை சர்வதேசமும் விரும்புகிறது!

## திருமலைக் கூட்டத்தில் சம்பந்தன் சுட்டிக்காட்டு

திருமலை, ஜூலை 28

இலங்கையின் ஆட்சி முறைமையில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும் என்பதில் சர்வதேச நாடுகள் உறுதியாக உள்ளன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை – சீனன்குடா பகுதியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்ததும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பக்கம் 02



# பிரபாகரன் பெற முயன்றதை கூட்டமைப்புப் பெற விடோம்!

## மஹிந்த ராஜபக்ஷ சூளுரை

தம்பதெனியா, ஜூலை 28

**ஆயுதப் போரின் மூலம் பிரபாகரன் வெற்றிகொள்ள எண்ணிய கோரிக்களைத் தற்போது ஜனநாயகப் போர்வையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடைய முயற்சிக்கின்றது. ஆகவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரபாகரனின் கோரிக்கைகளை அனுமதிக்கவோ, பெற்றுக் கொடுக்கவோ இடமளிக்கப் போவதில்லை.**

**– இவ்வாறு விமர்சித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.** பக்கம் 02



## பணம் மற்றும் கஞ்சாவுடன் இருவர் கைது



கிளிநொச்சி, ஜூலை 28

கிளிநொச்சி செல்வாநகர் பகுதியில் மூன்று இலட்சத்து பக்கம் 02



## ட்ரம்பின் சகாவுக்கு கொரோனாத் தொற்று

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் றொபேர்ட் ஓ பிரேய்னுக்கு பக்கம்02

## தேர்தல் பிரசாரத்துக்கு யாழ்.வரும் சம்பந்தன்

(நலோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 28.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பக்கம் 02















## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேட்பாளர்களும், அவர்களின் செம்புகாவிகளும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றார் எனத் தெரிய வருகின்றது.

தேர்தல் பிரசாரம் 2ஆம் திகதி ஞாயிறு இரவுடன் ஓய்கின்றது. 5ஆம் திகதி வாக்களிப்பு.

வழமைபோல இடையில் இரண்டு நாளும், தேர்தலன்றும் 'தண்ணீர்ப் பானம்' தாராளமாக ஓடும். வெற்றி எதிர்பார்ப்பு வேட்பாளர்கள் பலரும், வழமைபோல விளம்பரம், போஸ்டர், நோட்டீஸ் என்று ஒவ்வொரு தலைப்பிலும் நிதி ஒதுக்கியமை போன்று, இந்தத் தண்ணீர்ப் பானத்துக்கும் ஒதுக்கியுள்ளனர். சிலரின் கணக்கு மில்லியன்களைத் தாண்டுவதாகவும் தகவல்.

ஏற்கனவே தேவைப்பட்ட அளவுகள், ரகங்களில் போத்தல்கள் வாங்கிக் குவித்துப் பாதுகாப்பாக ஆங்காங்கே டம்ப்' செய்யப்பட்டுள்ளன.

புதனன்று தேர்தல். எனினும், செவ்வாய் மாலையே திருவிழா தொடங்கி விடும். விநியோகம் களைகட்டும்.

இந்தத் தண்ணீர்த் திருவிழாவுக்கு ஆப்பு அடிப்பதற்குத்தான் சில தரப்புகள் களத்தில் இறங்கியிருக்கின்றன.

தென்னிலங்கையில் இருந்து வந்திருக்கும் ஓர் இளைஞர் குழு பிரதான வேட்பாளர்களைச் சந்தித்து, 'குடிக்கக் கொடுத்து வாக்குத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட மாட்டோம்!' என்று சத்தியப்பிரமாணக் கடிதம் வாங்க முயற்சிக்கின்றதாம்.

சொல் ஒன்று செயல் வேறாக இருக்கும் நம்மூர் அரசியல்வாதிகளுக்கு ஒரு புறம் அப்படிச் செய்ய மாட்டேன் என்று சத்தியப் பிரமாணம் செய்தபடி, மறுபுறம் முகவர்களை வைத்து தண்ணீர் பார்ட்டியை ஆறாய் ஓட விடுவது அவ்வளவு ஒன்றும் வெட்கப்படும் விடயமே அல்ல.

இதற்கிடையில் தெற்கில் முக்கிய – பிரபல – அரசியல்வாதி ஒருவர், இப்படி தண்ணீர் வார்க்கும் வேட்பாளர்களுக்கு உங்கள் வாக்குகளை அளிப்பதில்லை என்றுதீர்மானியுங்கள்எனப்பெண்களைக் கோர ஆரம்பித்தமையால் அங்கு பல வேட்பாளர்களுக்குத் தலையிடி தொடங்கியிருக்கின்றதாம்.

கொள்கைப் பற்றோடு நிற்கும் நம்மூர் வேட்பாளர்களும் இப்படி ஒரு விவகாரத்தைத் தொடங்கலாம்.

'எங்களுக்கு வாக்குப் போடாவிட்டாலும், வாக்குக்காகத் தண்ணீர்' வார்ப்பவர்களுக்கு வாக்குப் போடுவதில்லை என்றுமுடிவுகட்டுங்கள்!" – என்று 'உண்மையான' வேட்பாளர்கள் கோரலாம். ஒரு புறம் அப்படிப் பகிரங்கமாகக் கோரிக் கொண்டே மறுபுறம் சத்தம் சந்தடியின்றி வார்த்து விடுவதில் நம் அரசியல்வாதிகளும், அவர் தம் எடுபிடிகளும், செம்புகாவிகளும் படுகெட்டிக்காரர்கள்.

குடிகாரன் பேச்சு, விடிஞ்சாப் போச்சு!' என்பார்கள். விடிந்து வெறி முறிந்தால் தான் போச்சு.

நம்ம அரசியல்வாதிகள் தாம் இலக்கு வைக்கும் வட்டங்களுக்கு வாக்களிக்கும் வரை வெறி முறியாமல் பார்த்துக் கொள்வர். குடித்தால் பொய் சொல்ல, முதுகில் குத்த முயலமாட்டார்கள். வெறியில் மனம் குழந்தைத்தனமாகி விடும். அப்போது நேர்மையாக – விசுவாசமாக – நடந்து கொள்வர், தங்களுக்குத்தான் வாக்களிப்பர் என்ற நம்பிக்கை வேட்பாளர்களுக்கு. அதுதான் காலம் காலமாகத் தேர்தல் தோறும் இந்த எத்தனம் வெற்றிகரமாகத் தொடர்வதற்குக் காரணம்.

'மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும்' என்பார்கள்.

தேர்தல் வாக்களிப்பு இருக்கும் வரை தண்ணீர் வார்த்தலும் இருக்கவே செய்யும். அது நமது கலாசாரத்தில் பின்னிப் பிணைந்து விட்ட, மாற்ற முடியாத வழக்காறாகி விட்டது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்று நாங்கள் கணக்கிடும் – நம்பும் – சில வேட்பாளர்கள் கூட ஆள் வைத்துத் தண்ணி வார்ப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள் என்று அரசல் புரசலாகத் தகவல் என்பதுதான்.

இப்போதுதான் எல்லோர் கைகளிலும் 'கமரா போன்கள்' தாராளமாகப் புழங்குகின்றன.

இந்தத் தண்ணீ வார்ப்பு விவகாரத்தை வைத்து நமது இளம் தலைமுறை ஊடகவியலாளர்கள் 'இன்வெஸ்டிகேன் ஜெர்னலிஸம்' செய்து செம கட்டுரைகளை ஆக்கலாம். தகவல்களைப் பிய்த்து உதறி அம்பலப்படுத்தலாம்.

வாக்களிப்புக்கு முந்திய இத்தகைய கூத்துக்களை அம்பலப்படுத்த சில குழுக்கள் கமரா போன்களுடன் ஏற்கனவே களத்தில் இறங்கும் திட்டத்தில் இருக்கின்றன. வேட்பாளர்களே உஷார்!

வாக்களிப்பு சமயத்தில் முகப்புத்தகங்களில் உங்கள் பெயருடன் வீடியோக் காட்சிகள் வெளியானால் உங்களின் இவ்வளவு நாள் முயற்சியும் கெட்டு நாறிவிடும்...!

'அவளைத்தொடுவானேன், அவஸ்தைப் படுவான் ஏன்?' – என்ற மாதிரி தண்ணீ வார்ப்பு மூலம் வாக்குத் திரட்டும் திட்டத்தில் இறங்கி கையைச் சுட்டுக் கொள்வதை விட அதை நாடாமல் இருப்பது மேல்...!

இனி விடயம் உங்கள் ஒவ்வொருவரையும் பொறுத்தது...!

–மின்னல்–

## பணம் மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
18 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஒரு கிலோ கேரளக் கஞ்சாவுடன் நேற்று முற்பகல் 11 மணியளவில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பிரதி பொலீஸ் மா அதிபரின் விசேட பொலீஸ் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய செயற்பட்ட பொலிஸார் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரையும் செல்வாநகரைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்தே மேற்படி பணம் மற்றும் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

## நேற்று மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இதேவேளை, நேற்று 15 பேர் குணமடைந்த வீடு திரும்பினர். குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2121 ஆக உயர்ந்துள்ளது.

## ட்ரம்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

அவர் கடைசியாக அதிபர் ட்ரம்பை எப்போது சந்தித்தார் என்பது தெரியவரவில்லை.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பங்குகொள்ளும் நோக்கில் எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஆதரவு தேடி இன்று திருகோணமலையில் இடம்பெறும் பிரசாரக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் பங்குகொள்கின்றனர்.

இதேநேரம், நாளை மட்டக்களப்பில் இடம்பெறும் கூட்டங்களில் கூட்டமைப்பின் தலைவரும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் பங்குகொள்ளும் அதே நேரம் முதலாம் திகதி யாழ். குடாநாட்டில் பருத்தித்துறை மற்றும் தெல்லிப்பழை ஆகிய இடங்களில் இடம்பெறும் இரு கூட்டங்களில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளார்.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படையிலான இந்தச் சந்திப்பில், கூட்டமைப்பினருக்கு தூதுவர் மதிய போசன விருந்தளித்தார்.

யாழ். நகரிலுள்ள ஜெட்விங் ஹொட்டலில் இந்தச் சந்திப்பு நடந்தது.

தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் த.சித்தார்த்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், பா.கஜதீபன் உள்ளிட்ட சிலர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தேசிய அரசியல், தமிழ் அரசியல் சூழ்நிலைகள் குறித்து கூட்டமைப்பினரிடம் தூதுவர் கலந்துரையாடினார்.

சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்பட்டதாக கூறப்பட்ட விவகாரம் குறித்தும் கூட்டமைப்பினர் கேட்டறிந்து கொண்டனர்.

# ரணிலின் ஆட்டம் ஆரம்பம்!

## தமிழ் முற்போக்கு கூட்டணியின் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிகள் பறிபோகும் அபாயம்!!

மனோ கணேசன், திகாம்பரம் தரப்பின் தமிழ் முற்போக்கு கூட்டணியின் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிகள் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2018 பெப்ரவரியில் நடைபெற்ற உள்ளாட்சி சபைத்தேர்தலின்போது ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து யானை சின்னத்தின் கீழ் தமிழ் முற்போக்கு கூட்டணி நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டது.

குறிப்பாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் உள்ளாட்சி மன்றங்களுக்கு தெரிவான உறுப்பினர்கள் யானை சின்னத்தின் கீழ் களமிறங்கி வெற்றி பெற்றவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ள உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் விரைவில் அந்தப் பக்கமா, இந்தப் பக்கமா என முடிவொன்றை எடுக்காவிட்டால் பதவிகள் பறிக்கப்படும் என கட்சியின் உயர்பீடம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்காரணமாகவே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ள முற்போக்கு கூட்டணி உறுப்பினர்களுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் முரண்பாடு அதிகரித்து, அக்கட்சிக்குச் சார்பானவர்களை ஐ.தே.க. நீக்கும் பட்சத்தில், யானை சின்னத்தின்கீழ் போட்டியிட்ட முற்போக்கு கூட்டணிக்கும் நெருக்கடி ஏற்படும் என கூறப்படுகின்றது.

அதேவேளை, தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதான பங்காளிக்கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணி, கொழும்பிலும், கண்டி மாவட்டத்திலும் சொந்த சின்னத்தில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. எனவே, அக்கட்சி உறுப்பினர்களுக்கு சிக்கல் ஏற்படாது. திகா கட்சி உறுப்பினர்களுக்கே நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

# வைத்தியர் வேடம் போட்ட இளைஞர் பெண்கள் விடுதியில் வைத்துக் கைது

நிட்டம்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் பெண்கள் விடுதிக்கு வைத்தியர் போன்று தன்னை அடையாளப்படுத்தி வந்த நபர் ஒருவர், பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திஹாரி, தர்கா மாவத்தையைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, இந்தச் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து இதயத் துடிப்பு மானி – 01, போலி இறப்பர் முத்திரை – 01, சிரின்ஜர் – 01, சேலைன் குழாய் – 01, ஈ.சி.ஜி. ரோல் 05, மடிக்கணினி 01, தொலைபேசி 01, மோட்டார் சைக்கிள் 01 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபரை, அத்தனகலை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

# களனியில் 6 வீடுகள் தீக்கிரை

களனி, பெத்தியாகொட வீதியில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீயினால் அப்பகுதியில் இருந்த 06 வீடுகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

மின்சார கோளாறு காரணமாக வீடொன்றில் முதலில் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனசந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபையில் தீயணைக்கும் பிரிவினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த தீ விபத்தில் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஆட்சிமுறைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –இலங்கையில் தமிழர்களது பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதை சர்வதேசம் வலியுறுத்துகின்றது. எனவே நாம் சர்வதேச ரீதியாக பலமாக இருக்கின்றோம்.

இலங்கையில் ஆட்சிமுறைமை, அதிகார முறைமை அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டு, அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு அந்தந்தப் பிராந்தியங்களில் வாழும் மக்கள் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் சமூக, சமய, கலாசார ரீதியில் முன்னேற வேண்டும் எனும் கருத்தில் உறுதியாக இருக்கின்றனர்.

அதனை புதிய நாடாளுமன்றத்தில் தாமதமில்லாமல் நிறைவேற்ற நாம் முன்னிற்போம். கடந்த அரசின் காலத்தில் ஆளும் தரப்பில் பிளவுகள் ஏற்பட்டதால் எம்மால் அந்தக் கருமங்களை நிறைவேற்ற முடியாது போனது. ஆனாலும் பல முன்னேற்றகரமான செயற்பாடுகள் காணப்பட்டன.

அரசியல் தீர்வு சம்பந்தமாக நாங்கள் முன்னெடுத்து வந்த செயற்பாடுகளில் முன்னேற்றம் இருக்கின்றது. நாங்கள் பலமாக நாடாளுமன்றம் செல்வோமானால் எம்மால் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் – என்றார்.

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குருநாகல், தம்பதெனிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போர்காலத்தைப் போன்று பேரழிவான தொரு சூழல் மீண்டும் ஏற்படுவதற்கு எமது அரசில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாய்ப்பளிக்கப்படமாட்டாது.

நாட்டு மக்கள் இம்முறை பொதுத் தேர்தலில் தெளிவான முடிவொன்றை எடுக்க வேண்டும்.

போரின்போது காணப்பட்ட பேரழிவு காரணமாக சுமார் 60 ஆயிரம் கல்வி ஆற்றலுடைய இளைஞர்களை நாடு இழந்தது. பட்டதாரிகள் பெருமளவானோர் இந்தப் பேரழிவான சூழலில் கொல்லப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு வடக்கை, கிழக்கையும் வேறுபடுத்தி தனியொரு இராஜ்ஜியத்தைக் கட்டி யெழுப்ப முயற்சித்தபோதும் எமது அரசால் புலிகளின் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

போரில் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு புதிய கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தை எமது புதிய ஆட்சியில் ஏற்படுத்திக் கொடுப்போம். தொழிற் பயிற்சிகளையும் தொழில்நுட்ப கல்வியையும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம் – என்றார்.

# 75 அடி பள்ளத்தில் பாய்ந்த ஓட்டோ!



கொழும்பிலிருந்து ஹட்டன், பொகவந்தலாவை நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்று பொகவந்தலாவை அளுத்கால பகுதியில் 75 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

கொழும்பிலிருந்து பொகவந்தலாவை நோக்கிச்சென்ற இந்த ஓட்டோ சாரதியின் கட்டுப்பாட்டை மீறி பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஓட்டோ சேதமாகியுள்ளபோதும் அதில் பயணித்தவர்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லையெனத் தெரிவித்துள்ள ஹட்டன் பொலிஸார் விபத்துத் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.




# பிள்ளையானின் விளக்கமறியல் மேலும் 3 மாதங்களுக்கு நீடிப்பு



கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திகாந்தனை ஒக்ரோபர் 19ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிமன்ற நீதிபதி என்.சிறீநிதி உத்தரவிட்டார்.

கடந்த 2005.12.25 ஆம் திகதி அன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பாக பிள்ளையான் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டு விளக்க மறியிலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவரது வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஒக்ரோபர் 19ஆம் திகதி வரை விளக்க மறியில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பாலியல் லஞ்சம் கோரிய பொலிஸ் அதிகாரி கைது

பாலியல் லஞ்சம் கோரிய குற்றச்சாட்டுக்காக பியகம பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்ட பொலிஸ் அதிகாரியொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணையக அதிகாரிகளினால் நேற்றிரவு கடுவலை, பஹல போமிரிய பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில் சந்தேக நபரை நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேர்தலின் போது இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்குங்கள்!

யுத்தம் முடிந்து பதினொரு வருடங்கள் கடந்து விட்டன. எனினும் தமிழர் தாயகம் - குறிப்பாக வடக்கு - தொடர்ந்தும் இராணுவப் பிடிக்குள்ளேயே வைக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் இங்கு இராணுவப் பிரசன்ன விகிதம் - செறிவு - அதிகம்.

மொழி ரீதியாகவும், மத ரீதியாகவும், இன ரீதியாகவும் ஓர் அந்நிய இராணுவமாகவே இங்குள்ள படையைத் தமிழ் மக்கள் நோக்குகின்றனர்.

இந்தப் படையை யாரும் 'இலங்கைப் படை' என்றோ 'இலங்கை இராணுவம்' என்றோ கருதுவதில்லை. பெரும்பாலும் வடக்கின் சுதேசிகளான தமிழர்கள் இதனை சிங்கள இராணுவமாகவும், சிங்களப் படையாகவுமே பார்க்கின்றார்கள். கருதுகின்றார்கள். அதற்குக் காரணம் உண்டு.

பெயருக்கு என்னவோ இது இலங்கை இராணுவம் என்றாலும் அதில் சிறுபான்மையினருக்கு - குறிப்பாகத் தமிழர்களுக்கு - நியாயமான இடமேயில்லை. குறைந்த பட்சம் நாட்டில் நிலவும் இன விகிதாசாரக் கணக்கு வீதம் இலங்கை இராணுவத்தில் பின்பற்றப்படுவதேயில்லை.

பெரும்பாலும் முற்றும் முழுதாகச் சிங்களவர்களை மட்டுமே கொண்டதாக இந்த இராணுவம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில தமிழர்கள் - தமிழ்ப் பேசும் வம்சாவளியில் வந்தவர்கள் - இராணுவத்தில் இருக்கக் கூடும். ஆனால் பெரும்பாலும், முற்றும் முழுதாகச் சிங்களவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுத்துக் கட்டமைக்கப்பட்ட ஒரு படை அது.

பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற போது, இலங்கை இராணுவத்தின் முதல் இரு இராணுவத் தளபதிகளும் வெள்ளைக்காரர்களாக இருந்தனர். முதலாவது சுதேசி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் முத்துக்குமாரு.

அது மாத்திரமல்ல, இலங்கை இராணுவத்தில் நீண்ட காலம் பதவியில் இருந்தவர் லெப்டினன்ட் ஜெனரல் சேபால ஆட்டிகல. அவர் பத்தாண்டுகள் அப்பதவியில் இருந்தார். அவருக்கு அடுத்து இராணுவத் தளபதி பதவியில் நீண்ட காலம் இருந்தவர் தமிழரான அன்ரன் முத்துகுமாருதான். அவர் சுமார் ஐந்து ஆண்டுகள் அப்பதவியில் நீடித்தார்.

ஆனால் இப்போது இலங்கை இராணுவத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய - சொற்ப - ஒரு சில - இராணுவ அதிகாரிகளே தமிழர்களாக உள்ளனர்.

பெரும்பாலும் சிங்களவர்களையே அந்த இராணுவம் கொண்டிருப்பதாலும் -

தமிழின அழிப்பு என்ற கொடூரத்தை மேற்கொண்ட படையணி இதுவே என்பதாலும் -

இதனை சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் படையாகவே தமிழர் தேசம் நோக்குகின்றது என்பது வெள்ளிடைமலை.

இந்த இராணுவத்தின் பிரசன்னம் தேர்தல் சமயத்தில் வடக்கில் தீவிரமாக இருப்பது ஜனநாயகத் தேர்தலுக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாக அமையும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும், இத் தேர்தலின் வேட்பாளருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், யாழ்.வந்த சுவிஸ் தூதுவர் மற்றும் தூதரக அரசியல் விவகார அதிகாரி ஆகியோரிடம் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை என்ற பெயரில் வடக்கில் இராணுவத்தினரின் தடை நிலைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றமையை அவர் விவரங்களோடு சுவிஸ் இராஜதந்திரிகளுக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

இராணுவத்தினரின் இத்தகைய பிரசன்னம் ஜனநாயகத் தேர்தலுக்கு ஒரு குழப்பமான விவகாரம் என்று நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவிக்கின்ற கருத்து உண்மையில் மிக முக்கியமாகக் கவனத்தில் எடுத்து அவதானிக்க வேண்டிய விவகாரமாகும்.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைக்கு என்று இராணுவத்தினர் அழைக்கப்பட்டாலும் அவர்கள் அந்த வேலையை விடுத்து மக்களைத் துன்புறுத்தும் நடவடிக்கையையே முன்னெடுக்கின்றனர் என நீதியரசர் விக்னேஸ்வரன் பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கின்றமையும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் படைகளை விலக்கி, அவற்றை முகாம்களுக்குள் முடக்க வேண்டும் என்றும், சட்டம் - ஒழுங்கைப் பேணும் பொறுப்பு பொலிஸாரிடமே விடப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிடுகின்ற - அறிவிக்கின்ற - வேண்டுகோள் முக்கியமானதாகும்.

இப்போது வடக்கில் தேர்தலில் நிற்கும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து வலியுறுத்த வேண்டிய விவகாரமாகவும் இது அமைகின்றது.

இந்தக் கோரிக்கையை வெளியிடுவதில் தமிழ்க் கட்சிகள் ஏன் ஒன்றிணையக் கூடாது?

# ஓடி ஒளிந்துகொண்டு எடுபிடிகளை அனுப்பி எமது கூட்டங்களைக் குழப்ப கஜன் முயற்சி!

## சுமந்திரன் பகிரங்கமாகக் குற்றச்சாட்டு; விக்கியையும் தோலுரித்துக் காட்டினார்

(ந.லோகதயாளன்)

கட்சித் தலைவரை விவாதிக்க அழைத்தால் கட்சியின் தலைவர் ஓடி ஒளிந்துகொண்டு எடுபிடிகளை அனுப்பி எமது கூட்டங்களைக் குழப்ப முயல்கின்றார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம் நேற்றுமுன்தினம் சுண்டுக்குளி சனசமூக நிலைய கலையரங்கில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் மக்கள் சமஷ்டிக்குக் குறைவான எந்தத் தீர்வுக்கும் வாக்களித்தமை கிடையாது. இது யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்களுக்கு நன்கு தெரியும். இந்தப் பிரதேசங்களிலே சமஷ்டியைக் கேலி செய்தவர்கள் யார் என்பதும் உங்களுக்கும் தெரியும்.

சமஷ்டி தீர்வு வேண்டாம் என்று தொடர்ச்சியாகக் கூக்கூரல் இட்ட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தாங்கள் சமஷ்டியைப் பெற்றுத் தருவோம் எனக் குத்துக்கரணம் அடித்து வந்து நிற்கின்றார்கள்.

சமஷ்டி என்றால் என்னவென்றே தெரியாதவர்கள், தமது கட்சியின் பெயரிலேயே 'அகில இலங்கை' என்கின்றவர்கள், ஒற்றையாட்சி முறைமையை ஏற்றுக்கொண்ட ஒரு கட்சியாப்பைக் கொண்டவர்கள், தாங்கள்தான் சமஷ்டியைப் பெற்றுத் தருவோம் எனக் கூறுவதைப் போன்ற ஒரு போக்கைக் கடைப்பிடிக்கின்றார்கள்.

இது தொடர்பில் பேசுவோம் வாருங்கள் என்றால் அவர்களின் தலைவர் ஓடி ஒளிந்து விடுகின்றார். ஆனால், அவரது எடுபிடிகளை இங்கே கூட்டங்களுக்கு அனுப்புகின்றார். பல இடங்களில் சுமந்திரன் வந்தால் நான் விவாதத்துக்கு வருவேன் என்று அறிவித்தவருக்கு சுமந்திரன் வருகின்றார் என உறுதிப்படுத்தப்பட்ட பிறகு ஓடி ஒளித்திருக்கின்றார். அது தொடர்பில் கேட்டால் நான் கட்சித் தலைவர்; இன்னுமொரு கட்சித் தலைவரோடுதான் விவாதிப்பேன் என்று இப்போது கூறுகின்றார். ஆனால், இதற்கு முன்னர் 4 தடவைகள் என்னோடு விவாதித்தவர்.

அவ்வாறு 4 தடவை விவாதம் நடத்தும் போதும் அவர் கட்சித் தலைவர்தான். ஏனெனில் அந்தக் கட்சிக்குப் பொன்னம்பலத்தைத் தவிர வேறு எவரும் தலைவராக இருக்க முடியாது. அதனால் அந்தக் காலத்திலும் அவர் கட்சித் தலைவர். ஆனால், நான் அன்றும் கட்சித் தலைவர் இல்லை; இன்றும் கட்சித் தலைவர் இல்லை. இவ்வாறு 10 வருடமாக 4 தடவை விவாதித்தவர் தற்போது கட்சித் தலைவரோடுதான் விவாதிப்பேன் எனத் தெரிவித்து ஓடி ஒளிக்கின்றார். இதனை இரண்டு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதிலே சிவகரன் என்னோடு முரண்படுகின்றவர், என்னுடன் பல வருடங்களாகப் பேசாதவர். அவரே மேடையில் வைத்துக் கூறினார், சுமந்திரனைக்கொண்டு வா, சுமந்திரனைக்கொண்டு வா, சுமந்திரன் வந்தால் விவாதிக்கத் தயார் என்று கஜன் பொன்னம்பலம் என்னிடம் சொன்னார். ஆனால், சுமந்திரன் வந்துவிட்டார் என்று தெரிந்தவுடன் அவர் ஓடி ஒளித்து விட்டார் என்று சிவகரன் சொல்லுகின்றார்.

இதனைக் கூட செய்யத் தெரியாமல் பாவம் யாரோ மாலை நேரம் கூட்டங்களில் குழப்பத்தை விளைவிப்பவர்களை அனுப்பி தங்களையே மானபங்கப்படுத்தியிருக்கின்றார்கள். கட்சியினுடைய ஒரு மாநகர சபை உறுப்பினர் இன்னுமொரு கட்சியின் கூட்டத்துக்குச் சென்று குழப்பத்தை விளைவிக்கும் அளவுக்குக் கீழ் நிலைக்குக் கட்சி தள்ளப்பட்டிருக்கின்றது. ஜி.ஜி.பொன்னம்பலம் தலைவராக இருந்த கட்சி தகப்பனும் ஜி.ஜி.பொன்னம்பலம், பேரனும் ஜி.ஜி.பொன்னம்பலம். வெறுமனே பாட்டனின் பெயரைத்தன்னுடைய பெயராகவைத்துக் கொண்டால் போதாது. அவருக்குப் பேசவும் தெரியாது, விவாதிக்கவும் தெரியாது, நீதிமன்றப் படியேறவும் தெரியாது. அப்படியானவர்களின் ஆகைள் இப்படியான கூட்டத்துக்கு வந்து கேள்வி கேட்கின்றார்கள்.

வெறுமனே இரு தேசம்; ஒரு நாடு என்று அந்தக் கட்சியில் உள்ளவர்களுக்கே அதன் அர்த்தம் தெரியாது. ஜி.ஜி.பொன்னம்பலம் என்ற அந்தப் பரம்பரை மட்டுமே கட்சியின் தலைவராக வரமுடியும். இது என்ன ஜனநாயகம்? இவர்கள் எங்களை விமர்சிக்கத் துணிந்திருக்கின்றார்கள்.

அதேபோல் இளைப்பாறி சிவனே என்று இருந்த ஒருவரும் எங்களை விமர்சிக்கின்றார். இளைப்பாறிய நீதியரசர் என்ற காரணத்தினாலே நாங்கள் அவரைக் கொண்டுவந்து முதலமைச்சராக்கினோம். இப்போது அவருக்கும் எங்களை விமர்சிக்கத் துணிவு வந்துவிட்டது. என்ன கொள்கை என்று கேட்டால் கொள்கை தெரியாது. நாங்கள் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் வரைக்கும் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு கொப்பி பண்ண இரண்டு, மூன்று நாள் எடுத்திருக்கின்றது. அதனைக்கொப்பிசெய்வதற்குஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் பெயரையும் , சின்னத்தையும் மாற்றி விக்னேஸ்வரனை முன்னால் விடப்பட்டிருக்கின்றது. சோழனின் புலிக்கொடி இறக்கப்பட்டு விட்டது; இனி பட்டொளி வீசிப் பறக்கப் போவது பாண்டியனின் மீன் கொடி என அவர் சொல்கின்றார். மக்களை முட்டாள்களாக்க முனைபவர்களுக்கு மக்கள்தான் பதிலடி கொடுக்க வேண்டும்.

துரதிஷ்டவசமாக டக்ளஸ் தேவானந்தா போர்க்காலத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திலே கொஞ்ச நாள் கொடி கட்டிப் பறந்தார். அந்த நிலைமை மாற்றப்பட்டது. இப்போது அந்த நிலைமை கிடையாது. ஆனாலும், அது முழுவதுமாக இல்லாதொழிப்பதற்கு முன்பாக பல நிகழ்ச்சி நிரல்கள் இங்கே அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது தொடர்பிலும் யாழ்ப்பாணம் வாக்காளர்கள் சற்றுச் சிந்தித்து நடைபெறும் விடயங்களை அவதானிக்க வேண்டும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புஒருகொள்கைக் கானது. சமஷ்டி என்றால் அது எங்களுடையது. அது பெயரிலேயே பின்னிப் பிணைந்தது. அது தமிழ் மக்களின் தாரக மந்திரமாக இருக்கின்றது. மாற்றுக் கட்சி என்பவர்கள் உங்கள் கொள்கையைக் கூறுங்கள்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டுமல்ல வடக்கு, கிழக்கு மாகாணத்திலே கடந்த காலத்தில் பல பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டோம். இருப்பினும் நாம் அதனைக் கூறி வாக்குக் கேட்கவில்லை. இலட்சியக்கொள்கைக்காகவே வாக்குக் கேட்கின்றோம். இங்கே இடம்பெறும் அபிவிருத்திகள் மக்களின் வரிப் பணத்தில் இடம்பெற்ற அபிவிருத்திகள். ஆனால் நாங்கள் அதனைப் பரிந்துரைத்து இப்பகுதிக்குத் திருப்பினோம் – என்றார்.

# வடக்கில் இராணுவப் பிரசன்னத்தால் சுயாதீனத் தேர்தலுக்கு ஊறு நேரலாம்

## சுவிஸ் தூதரிடம் விக்கி முறையீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 27

இம் முறை 5 ஆம் திகதி தேர்தல் நடத்தி 6 ஆம் திகதியே வாக்கெண்ணுதல் நடைபெறவிருக்கின்றது. இரு நாள்களுக்கும் இடையில் இரவிலே பெட்டிகளுக்கு என்ன நடக்குமோ என்று ஒரு சந்தேக நிலை எழுந்துள்ளது. இவற்றிற்கு இராணுவத்தினரைப் பாதுகாப்புக்கு அழைத்தால் கட்டாயம் ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் நடைபெறும் என்று எண்ண இடமுண்டு. ஆகவே ஒரு காரணமும் இல்லாமல் வடக்கு மாகாணத்தில் மட்டும் இராணுவத்தினரை இறக்கியிருப்பது எதற்காக என்று அறிந்து கொள்வது முக்கியம்.

– இவ்வாறு சுவிஸ் தூதரிடம் நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரக அதிகாரிகள் இன்று காலை நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்தனர்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட தகவல்கள் வருமாறு:–

கொழும்புக்கான சுவிஸ் தூதுவர் கன்ஸ்பீட்டர் மொக் மற்றும் சிடோர் னியா கேபிறியல் (அரசியல் விடயங்களுக்குப் பொறுப்பானவர்) ஆகியோர் முன்னைய வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை இன்று காலை 09.00 மணிக்கு சந்தித்தனர்.

தற்போதைய கள நிலை பற்றி அறிந்துகொள்ளவே அவர்கள் வந்திருந்தார்கள். கள விவரம் பற்றி நீதியரசர் கூறுகையில் –

கிராம சேவகர்களுடன் மூன்று இராணுவ வீரர்களையும் சேர்த்து அவர்கள் ஒவ்வொருவரும் பணிபுரிய வேண்டியிருப்பது வருங்காலத்தில் குடியியல் விடயங்களையும் இராணுவத்தினரே செய் வார்களோ என்று யோசிக்க வைத்துள்ளது. ஏ9 வீதியிலே சுமார் 20 வீதித் தடைகள் இராணுவத்தினரால் போடப்பட்டிருப்பது எதற்காக என்று விளங்கவில்லை. கொரோனாவைக் காட்டி இவ்வாறான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடுவது வரும் தேர்தல் காலத்தில் மக்களைப் பயப்படுத்தி தேர்தலுக்குப் போகாமல் வைப்பதற்கோ என்ற சந் தேகத்தை உண்டு பண்ணுகின்றது. பின்னர் மக்கள் போகாதது கொரோ னாவிற்குப் பயந்தே என்று அவர்கள் கூறலாம். அத்துடன் பாதுகாப்பை ஒட்டித் தேர்தல் காலத்திலே இராணுவத்தினரை வெளிக் கொண்டு வருவது ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு செயல் என்று நீதியரசர் சுட்டிக் காட்டினார்.

இம் முறை 5 ஆம் திகதி தேர்தல் நடத்தி 6 ஆம் திகதியே வாக்கெண்ணுதல் நடைபெறவிருக்கின்றது. இரு நாள்களுக்கும் இடையில் இரவிலே பெட்டிகளுக்கு என்ன நடக்குமோ என்று ஒரு சந்தேக நிலை எழுந்துள்ளது. இவற் றிற்கு இராணுவத்தினரைப் பாதுகாப்புக்கு அழைத்தால் கட்டாயம் ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் நடைபெறும் என்று எண்ண இட முண்டு. ஆகவே ஒரு காரணமும் இல்லாமல் வடக்கு மாகாணத்தில் மட்டும் இராணுவத்தினரை இறக்கியிருப்பது எதற்காக என்று அறிந்து கொள்வது முக்கியம். – என்று உயர்ஸ்தானிகருக்கு நீதியரசர் கூறினார்.

இராணுவத்தினரைத் தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கைவாங்கி அவர்களை இராணுவ முகாம்களில் முடக்கி வைக்குமாறு அரசாங்கத்தைக் கோர வேண்டும் என்று உயர்ஸ்தானிகருக்கு நீதியரசர் வலியுறுத்தினார்.

இராணுவத்தினரை வட மாகாணத்திற்குள் இதுவரை அழைத்திருப்பது கொரோனா காரணமாக என்று கூறப்பட்டாலும் இராணுவத்தினர் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. மக்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளில்தான் ஈடுபட்டு வருகின்றார்கள். இதை நீங்கள் சர்வதேச உயர் ஸ்தானிகர்களுக்கும் மற்றயவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க அவை பற்றி உரியவர்களுக்குத் தெரியப்படுத்துவதாக உயர்ஸ்தானிகர் அறிவித்தார்.

அடுத்து வடமாகாணத்தின் இராணுவ அதிகாரியைக் காணச் செல்வதாகக் கூறி சுவிஸ் உயர்ஸ்தானிகரும் அரசியல் விடயப் பொறுப்பாளரும் விடை பெற்றுச் சென்றார்கள்.
– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு லஞ்சம் வழங்குகின்றது சீனா

## சுஜீவ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 28

இலங்கையில் வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்காக சீனா இலஞ்சம் வழங்குகிறதென ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சுஜீவ சேனசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தியா, ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகள் வர்த்தக உடன்படிக்கைகளுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக இலஞ்சம் வழங்குவதில்லை.

ஆனால் சீனா மாத்திரமே இலஞ்சம் வழங்குகின்றது. அதாவது உடன்படிக்கைகளுக்காக சீனா இலஞ்சம் வழங்குவதன் காரணமாகவே ராஜபக்ஷக்கள் அடிக்கடி சீனா செல்கின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகளை ஐக் கிய மக்கள் சக்தி ஒருபோதும் முன்னெடுக்காது - என்றார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**மின்னஞ்சல் -**
kalaikkathiradvt@gmail.com

**தொலைபேசி இலக்கம் -**
**076 443 8622**

# கோட்டாபயவின் ஏவலாளிகளாகிய அங்கஜன், டக்ளஸை தோற்கடியுங்கள்!

## தமிழ் மக்களிடம் சரவணபவன் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கோட்டாபய ராஜபக்ஷவை நாம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தடவை விரட்டி அடித்துவிட்டோம். ஆனாலும், அவரின் கைக்கூலிகளாக, ஏவ லாளிகளாக இங்கு வலம் வருபவர்களை இந்தத் தேர்தலுடன் அடித்து விரட்ட வேண்டும். எங்கள் சொந்தங்களை குருதி சிந்த வைத்த கோட்டாவை மறுபடியும் தோற்கடிக்க ஒரு வாய்ப்பு ஓகஸ்ட் 5ஆம் திகதி உங்களைத் தேடி வருகின்றது. கோட்டாவின் அடியாள்களான டக்ளஸ், அங்கஜனை தோற்கடிப்பதன் ஊடாக அதனை நீங்கள் செய்யவேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் வேட்பாளருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்கள் ஓரணியாக, ஒரு நிலைப்பட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைகாட்டிய வழியில் வாக்களித்தார்கள்.

தமிழினப் படுகொலையின் சூத்திரதாரி, இறுதிப் போரின் கொலையாளி யார் என்று தமிழ் மக்கள் கருதினார்களோ அவரை, தங்கள் வாக்கு என்ற ஆயுதத்தால் வெட்டி வீழ்த்தினார்கள். தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாக்களித் தமையால்தான் அது சாத்தியமாயிற்று.

கோட்டாபய ராஜபக்ஷ யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் வெறும் 23 ஆயிரத்து 261 வாக்குகளை மாத்திரம் பெற்றார். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழிகாட்டலில் தமிழ் மக்கள் வாக்களித்தமையால் சஜித் பிரேமதாஸ 3 இலட்சத்து 12 ஆயிரத்து 722 வாக்குகளைப் பெற்றார். இந்த மாபெரும் வெற்றி எப்படிச் சாத்திய மானது? தமிழ் மக்கள், தாங்கள் வேரறுத்து வீழ்த்த வேண்டியவரை ஓர்மத்துடன் வெட்டிச் சாய்த்தனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் கோட்டாபய, தான் சிங்கள மக்களின் வாக்குகளால் மாத்திரம் வெல்வேன் என்றும், தனக்கு முழு இலங்கையிலும் வாக்குகள் கிடைக்கப்பெற்றன என்பதைச் சர்வதேச சமூகத்துக்குக் காட்டு வதற்கு தமிழ் மக்களின் ஓரளவு வாக்குகள் கிடைத்தால் போதுமானது என்றும் பகிரங்கமாகச்சொல்லியிருந்தார். ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை முழுவதும் உள்ள தமிழ் மக்கள் ஓரணியாக நின்று கோட்டாவுக்கு எதிராக வாக்களித்தனர். கோட்டாபய தமிழ் மக்களிடம் அடிவாங்கி மண் கவ்வினார்.

### கோட்டாவுக்கு கொடுத்த அடி

கோட்டாபயவுக்கு தமிழ் மக்கள் கொடுத்த அடி பலமானது. அந்த அடியைத் தொடர்ந்தும் தக்க வேண்டும். ஆனால், இப்போது அதைத் தக்கவைக் கும் வகையில் தமிழ் மக்களின் செயற்பாடுகள் இல்லை என்பதுதான் வேதனைக்குரியது.

நடக்கப் போகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் கோட்டாபய யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்திலும் களமிறங்கியிருக்கின்றார். அதை நாங்கள் உணர்ந்து கொள்ளாமல் இருக்கின்றோம்.

இன்று இங்கு போட்டியிடும் அங்க ஜன், டக்ளஸ் போன்றவர்கள் யார்? அவர்கள் எந்தக் கட்சியில் இங்கு போட்டியிடுகின்றனர்? அவர்கள் வெற்றி பெற்றால் யாருடன் இணைந்துகொள்வார் கள்? இந்தக் கேள்விகளுக்கு விடை தேடியிருக்கின்றீர்களா?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அங்கஜன் இங்கு போட்டியிடுகின்றார். அவரது கட்சித் தலைவரும், அவரது கட் சியும் யாழ்ப்பாணத்துக்கு வெளியே எந்தக் கட்சியில் யாருடைய தலைமையில் இணைந்து போட்டியிடுகின்றன? ராஜபக்ஷக்களின் குடும்பக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இரண்டறக் கலந்துதான் அவர்கள் போட்டியிடுகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் மாத்திரம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற பெயருடன் ஏன் போட்டியிடுகின்றார்கள் என்று சிந்தித்துப் பார்த்தீர்களா?

### மக்களே ஏமாந்துவிடாதீர்கள்!

கோட்டாபயவின் முகத்துடன் களமிறங்கினால் ஜனாதிபதித் தேர்தலில் வாங்கிய அடியைவிட மோசமாக வாங்க வேண்டி வரும் என்று தெரிந்துதான், கோட்டாபய, அங்கஜன் என்ற முகம் ஊடாக யாழ்ப்பாணத்தில் களமிறங்கியுள்ளார். மக்களே நீங்கள் விழிப்பாக இல்லாவிட் டால், கோட்டாபயவுக்கு வாக்களித்து அங்கீகாரம் கொடுப்பது போலாகிவிடும்.

அங்கஜன் யாழ்ப்பாணத்தில் வெற்றி பெற்றால் அது அவரின் வெற்றியாக அமையாது. கோட்டாபயவின் கொள்கைகளையும் தமிழ் மக்கள் ஏற்று அங்கீகரிப்பது போன்றுதான் அமையும். அதற்கு நீங்கள் இடமளிக்கப் போகின்றீர்களா? கலர் கலராக பிரசுரங்களை அடித்து விட்டு, கவர்ச்சியாகப்படங்களைப்போட்டுவிஞ்ஞாபனம் அடித்து விட்டு உங்கள் வாக்குகளை சூறையாடி கோட்டாவுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கும் அங்கஜனுக்காக நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்களா? 8 மாதங்களுக்கு முன்னர் நீங்கள் அடித்து விரட்டிய கோட்டாபயவுக்கு, இப்போது வாக்கிடப் போகின்றீர்களா?

### டக்ளஸ் செய்தவற்றை மறந்துவிட்டீர்களா?

அமைச்சராக வலம் வரும் டக்ளஸ் தேவானந்தா கடந்த காலங்களில் என்ன செய்தார் என்பதை மறந்து விட்டீர்களா? 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த கோட்டாபயவுடன்இணைந்துஅவர்இங்குஎன்ன செய்தார் என்பதை மறந்து விட்டீர்களா?

வீதிக்கு வீதி சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் உங்களது பிள்ளைகள் இல்லையா? ஊரடங்கு நேரத்தில் இரவில் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டவர்கள் உங்கள் இரத்தமில்லையா? இராணுவத் துணைக்குழுவாக இயங்கி காட்டிக் கொடுத்தவர்களை மறந்து விட்டீர்களா?

டக்ளஸ் தேவானந்தா யாருடைய அமைச்சரவையில் அமைச்சராக இருக் கின்றார்? அவரின் எஜமானார் யார்? இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை கோட்டாபயவே.

கோட்டாபயவின் ஒரு முகம் அங்கஜன் என்றால் மறுமுகம் டக்ளஸ். டக்ளஸ் வெற்றி பெற்றால் யாருடன் கூட்டுச் சேருவார்? நீங்கள் இரண்டரை இலட்சம் வாக்குகளால் தோற்கடித்த கோட்டாவுடன்தான் அவர் கூட்டுச் சேர்வார்.

கோட்டாபயவை நாம் ஒரு தடவை விரட்டி அடித்து விட்டோம். ஆனாலும், அவரின் கைக்கூலிகளாக, ஏவலாளிகளாக இங்கு வலம் வருபவர்களையும் இந்தப் பொதுத்தேர்தலுடன் அடித்து விரட்ட வேண்டும். எங்கள் சொந்தங்களை குருதி சிந்தவைத்த கோத்தாவை மறுபடியும் தோற்கடிக்க ஒரு வாய்ப்பு ஓகஸ்ட் 5ஆம் திகதி உங்களைத் தேடி வருகின்றது. கோட்டாவின் அடியாள்களான டக்ளஸ், அங்கஜனை தோற்கடிப்பதன் ஊடாக அதனை நீங்கள் செய்ய வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# என் மீதான விசாரணைகள் அப்பட்டமான பழிவாங்கல்

## வவுனியாவில் ஊடகவியலாளர்களிடம் ரிஷாத் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 28**

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில், தன்னைச் சம்பந்தப்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் அனைத்தும் அப்பட்டமான அரசியல் பழிவாங்கலே என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**





வவுனியா, ஈரற் பெரியகுளத்தில் அமைந்துள்ள, குற்றப் புலனாய்வு திணைக்களக் கிளையில் இன்று இடம்பெற்ற குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணையின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

விமல் வீரவன்ஸ போன்ற இனவாதிகளும் மதவாதிகளும், சஹ்ரானின் தாக்குதலுடன் என்னைத் தொடர்புபடுத்தி, எப்படியாவது கூண்டிலடைக்க வேண்டுமென சதி செய்து வருகின்றனர்.

கடந்த அரசில், இந்தத் தாக்குதலுடன் என்னைச் சம்பந்தப்படுத்தி, குற்றச்சாட்டுக்கள் எழுந்தபோது, தற்போதிருக்கும் பதில் பொலிஸ்மா அதிபரே, பொலிஸ் விசேட குழுவொன்றை நியமித்து, இது தொடர்பில் விசாரிக்குமாறு தனது அதிகாரிகளைப் பணித்திருந்தார்.

இது தொடர்பான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கும் அவகாசம் வழங்கி, பகிரங்க அழைப்பொன்றையும் விடுத்தார். ரிஷாத் பதியுதீன் தொடர்பில் ஏதாவது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் பொலிஸில் முறையிடுங்கள் என்றார். அதுவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடாக, ஏழு நாள்கள் வரையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அதன் பிறகு விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, அத்துரலிய ரத்தன தேரர், எஸ்.பி.திஸாநாயக்க உட்பட இனவாதிகள் பலர், என் தொடர்பான குற்றச்சாட்டுக்களைக் கையளித்தனர். அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் விசாரிக்கப்பட்டன. பின்னர், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு இப்போதிருக்கும் அதே பதில் பொலிஸ்மா அதிபரே, அன்று எழுத்து மூலம் விசாரணை அறிக்கையை அனுப்பி வைத்தார்.

அந்த அறிக்கையின் பிரகாரம் ரிஷாத் பதியுதீனுக்கு, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடனோ, வேறு எந்தப் பயங்கரவாத சம்பவத்துடனோ எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்று எழுத்துமூலம் அறிவித்திருந்தார். அது நாடாளுமன்றத்தில் அறிக்கையாகவும் வெளிவந்திருக்கின்றது.

அவ்வாறிருந்தும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்ற இந்த 15 மாத காலத்தின் பின்னர், இப்போது தேர்தல் நெருங்குகின்ற வேளை, என்னை இலக்கு வைத்து விசாரணைக்கு அழைத்தனர். அதன் பின்னர், நான் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு இம்மாதம் விசாரணைக்கு சென்றபோது, 10 மணித்தியாலங்கள் வரை என்னை அங்கு வைத்திருந்து, நான் முன்னர் பதவி வகித்த அமைச்சு மற்றும் நிறுவனங்கள் தொடர்பிலும், மன்னாரைச் சேர்ந்த அலாவுதீன் மற்றும் அவர் கட்சியுடன் கொண்டிருந்த தொடர்புகள் குறித்தும் துருவித்துருவி விசாரித்தனர்.

அவர்கள் கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் நான் பதிலளித்தேன். அன்றைய தினம், இரவு 8 மணிக்கே என்னை வெளியேற அனுமதித்தனர். அதன் பிறகு இரண்டு நாள்கள் கழித்து, மீண்டும் வருமாறு அழைப்பு விடுத்தனர்.

தேர்தல் பரப்புரையில் நான் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால் நாடளாவிய ரீதியில் பல்வேறு கூட்டங்களில் பங்கேற்க வேண்டியதைத் தெரிவித்தேன். எனது பரப்புரை நடவடிக்கைகள் இதனால் தடைப்படுகின்றன எனக்கூறி, 15 மாதங்கள் வாளாதிருந்த நீங்கள், தேர்தல் முடியும்வரை பொறுத்திருந்து, அதன் பின்னர் அழைக்குமாறு கோரினேன். அதற்கு அவர்கள் இணங்காததினாலேயே, தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிட்டேன். எனது முறைப்பாட்டைக் கருத்தில் எடுத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்களும் கையெழுத்திட்டு, எனது நியாயமான கோரிக்கையை ஏற்று, பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தனர்.

எனினும், அவை அனைத்தையும் புறக்கணித்துவிட்டு, நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றனர். அதன் பின்னர், என்னை இன்று வவுனியாவில் விசாரணைக்கு அழைத்தார்கள். கேட்ட கேள்விகள் அனைத்துக்கும் தெளிவான பதில் கொடுத்தேன்.

எனக்கும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று பொலிஸுக்கு நன்கு தெரியும்; மக்களுக்கும் தெரியும். ஏன் முழு நாட்டுக்கே தெரியும். ஏற்கனவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் அதனை உறுதிப்படுத்தி விட்டது – என்றார்.

'இதனை நீங்கள் அரசியல் பழிவாங்கல் என்று கருதுகிறீர்களா?' என்ற ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த முன்னாள் அமைச்சர் ரிஷாத், நிச்சயமாக இதனை ஓர் அரசியல் பழிவாங்கலாகவே பார்க்கின்றேன் என்றார்.

'மஹிந்தவுடன் இருந்துவிட்டு மைத்திரிக்கு ஆதரவளித்தது காரணம் எனக் கருதுகின்றீர்களா?' என்ற மற்றொரு ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ரிசாத், ஆம், அதுவும் ஒரு காரணம் தான். அத்துடன் 52 நாள் சட்டவிரோத அரசுக்கு நான் கைகொடுக்கவில்லை என்பதும் இன்னுமொரு காரணம். இவை எல்லாவற்றையும் சேர்த்துவைத்தே இந்தத் தண்டனைகள் தரப்படுகின்றன – என்று அவர் கூறினார்.

# அநுரகுமாரவும் ஷானி அபேசேகரவும் சாட்சியமளிக்க அழைக்கப்படமாட்டார்

## அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு மேன்முறையீட்டு மன்றில் உறுதியளிப்பு

கொழும்பு, ஜூலை 28

மனுக்கள் பரிசீலிக்கப்படும் வரை, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவும் சாட்சியம் அளிப்பதற்கு அழைக்கப்பட மாட்டார்கள் என்று அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணைசெய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வாக்குறுதி அளித்துள்ளனர்.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பழிவாங்கல் தொடர்பான முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டிருந்தது– குறித்த முறைப்பாட்டிற்கு அமைய, சாட்சியம் அளிப்பதற்காக முன்னிலையாகுமாறு அவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்ட அழைப்பாணையை இரத்துச் செய்யுமாறு கோரி அநுரகுமார திஸாநாயக்கவும், ஷானி அபேசேகரவும் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இம்மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, அவர்கள் இருவரையும், சாட்சியம் அளிப்பதற்கு அழைக்கப்படாமல் இருப்பதற்கு இவ்வாறு வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இம்மனுத் தொடர்பான மேலதிக பரிசீலனை எதிர் வரும் செப்டெம்பர் 29ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# மூத்த தமிழ் ஊடகவியலாளர் காசி நவரத்தினம் காலமானார்



மூத்த ஊடகவியலாளர் காசி நவரத்தினம் 79 ஆவது வயதில் நேற்று திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

1965ஆம் ஆண்டு காலப்பகுதியில் 'வீரகேசரி' பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்ட அவர் நீதிமன்ற செய்திகளையும் சேகரித்து வழங்கியிருந்தார். 1970 ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்திப் பிரிவில் இணைந்துகொண்ட அவர் அங்கு நீண்டகாலம் பணியாற்றி, 1985 ஆம் ஆண்டு மீண்டும் வீரகேசரியில் யாழ். அலுவலக செய்தியாளராக இணைந்துகொண்டார்.

1990 ஆம் ஆண்டு வரை வீரகேசரியின் யாழ். அலுவலகத்தில் பணியாற்றிய அவர் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக கொழும்பிலுள்ள அதன் தலைமை அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். அங்கு இரவு நேர கடமை ஆசிரியராகவும், குற்றவியல் செய்தியாளராகவும் பணியாற்றி இருந்தார்.

1997 ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது அப்பத்திரிகையின் உலகசெய்திக்கு பொறுப்பாசிரியராக இணைந்து கொண்டார்.

அதனை தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சூரியன் எவ்.எம். ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டபோது அதன் செய்திப் பிரிவுக்கு பொறுப்பாசிரியராக நியமனம் பெற்று சில ஆண்டுகள் பணியாற்றி வந்தார்.

இதன் பின்னர் ஓய்வு பெற்றுச் சென்ற அவர் வீட்டில் இருந்தவாறு பத்திரிகை நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகிய வற்றுக்கு பகுதிநேர மொழிபெயர்ப்புப் பணிகளில் இறுதிக்காலம் வரை மேற்கொண்டிருந்தார்.

தமிழ் மற்றும் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்த அவர் தனது ஆளுமைமூலம் ஊடகத்துறைக்கு பங்களிப்பை வழங்கியிருந்தார். இவர் யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியை பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

வீரகேசரியில் பிரதம ஆசிரியர்களாக இருந்த கே. வி. எஸ். வாஸ், கே.சிவப்பிரகாசம், டேவிட் ராஜு, ஆ. சிவநேசச் செல்வன், எஸ்.நடராஜா ஆகியோருடன் இணைந்து இவர் பணியாற்றி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் இதுவரை 310 முறைப்பாடுகள்

(ந.லோகதயாளன்)

2020ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் சமயம் வடக்கு மாகாணத்தில் தேர்தல் விதிமுறை மீறல்களின் பதிவுகளும் அதிகரித்துள்ளன. இதுவரை 310 பதிவு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் அதிகப்படியான முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்திலேயே செய்யப்பட்டுள்ளன. இங்கே 110 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டமையோடு வவுனியா மாவட்டத்தில் 71 முறைப் பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் 38 முறைப்பாடுகளும் பதிவு செய் யப்பட்டுள்ளன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 35 முறைப்பாடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 56 முறைப்பாடுகளுமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 145 முறைப்பாடுகளும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 165 முறைப்பாடுகளுமாக மொத்தம் 310 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

# ரணில் பிரதமரானால்தான் தமிழருக்குத் தீர்வு கிட்டும்

## அடித்துக் கூறுகின்றார் விஜயகலா

*கொழும்பு, ஜூலை 28*

*தமிழ் மக்களின் தேசிய தலைவர் எனத் தம்மைக் கூறிக்கொள்பவர்கள் வன்னியில் இறுதி யுத்தத்தில் மக்கள் இனப்படுகொலை செய்யப்படும்போது எங்கே போனார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.*



பருத்தித்துறையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கூட்டத்தில் விஜயகலா மகேஸ்வரன் மேலும் கூறியவை வருமாறு:-

இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்கள் அன்று தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தால் அரசாங்கத்திற்கு ஒரு பேரிடியாக இருந்திருக்கும். மக்களும் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்.

நான் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். இவர்களெல்லாம் தமிழ் மக்களின் நலனிற்காக தேர்தலில் போட்டியிடுபவர்களாக இருந்தால் ஏன் இவ்வாறு கட்சிகளாக பிரிந்து வாக்குகளை சிதறடிப்பதற்கு செயற்படுகின்றார்கள்?

அத்தோடு சிலர் தம்மை தேசியத் தலைவர் என்று கூறித் திரிகிறார்கள். இவர்களெல்லாம் வன்னியில் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் நடைபெற்ற போது எங்கே இருந்தார்கள்?

மேலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த சிலர், விடுமுறை எடுத்துக்கொண்டு வெளிநாடுகளில் போய்த் தங்கியிருந்தார்கள்.

அவ்வாறு தமது சுயலாப அரசியல் செய்வதற்காகவே இங்கே வாக்கு கேட்டு வருகின்றார்கள். எனவே மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரைக்கும் இரண்டு முறை எமது தலைவர் பிரதமராக இருந்த போது, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டார்.

எனவே ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலே நமக்கு உரிய தீர்வு கிடைக்கும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கில் இப்போதும் தனி நிர்வாகம்தான் அதனால் இம்முறை ஊன்றிக் கவனிப்போம்

### தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கூறுகிறார்

**(ந.லோகதயாளன்)**

வடக்கில் இப்போதும் தனி நிர்வாகம்தான் நடக்கிறது. அதனால் அங்கே அதிக கவனம் செலுத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்காக எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் உள்ளூர் ஊடகங்கள், உள்ளூர்த் தொலைக் காட்சிகளான கேபிள் இணைப்புக்களில் விளம்பரங்கள், தேர்தல் கருத்துக்களைப் பரப்ப முடியுமா என தேர்த்தல் ஆணைக் குழுவின் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. சார்பில் சி.தவராசா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஆணைக்குழுத் தலைவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

இதன்போது ஆணைக் குழுவின் தவிசாளர் மேலும் தெரிவிக்கையில் -

எந்தவகையான ஊடகமும் அந்தச் சமயத்தில் எந்த விளம்பரமோ அல்லது ஊக்கமளிக்கும் விடயங்களையோ பிரசுரிக்க முடியாது என்பதுதான் சட்டம். ஆனாலும் வடக்குஎப்பவும் தனி நிர்வாகமாகவே இருக்கின்றது. அதனால் இம் முறை இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். - என்றார்.

## உருக்குலைந்த நிலையில் சடலம் தலைமன்னாரில் கரை ஒதுங்கியது

**(தலைமன்னார் நிருபர்: வாஸ் கூஞ்ஞ)**

தலைமன்னார் தென் கடல் பிராந்திய பழைய பாலம் கடற்கரைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. இந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுவரும் கடற்படையினர் நேற்றுத் திங்கட்கிழமை காலையில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரை ஒதுங்கி இருந்ததைக் கண்டு தலைமன்னார் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

இனம் காண முடியாத நிலையில் சடலம் உருக்குலைந்து காணப்பட்டதாகவும், அடையாளம் காணக்கூடிய எந்தவித சான்றுகளும் அதில் இருக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். சடலத்துக்கு உரியவர் கறுப்பு நிற நீள்காட்சட்டை அணிந்திருந்திருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. இது சுமார் 45, 50 வயதுக்கு உட்பட்ட ஆணின் சடலமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதால் சட்டவைத்திய அறிக்கையை பெறும் நோக்குடன் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அதனை அனுப்பி வைக்குமாறு பொலிஸருக்கு மன்னார் பதில் நீதவான் இம்மானுவேல் கயஸ் பல்டானோ உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து சடலம் யாழ் வைத்தியசாலைக்குப் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

## வெடிபொருள்களுடன் ஒருவர் பாடசாலைக்கு அருகில் கைது

கிண்ணியா அல் அக்ஸா பாடசாலைக்கு அருகில் வெடிபொருள்கள் வைத்திருந்த நபரொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை போதைப்பொருள் தடுப்பு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக இந்த நபர் நேற்றைய தினம் கைது செய் யப்பட்டார்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 201 கிராம் 400 மில்லிகிராம் வெடிபொருள்களும், 4 டெட்டனேட்டர்கள் மற்றும் சேவைக் கம்பிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

42 வயதுடைய சந்தேக நபர் தற்போது கிண்ணியா காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## முதலாவது லங்கன் பிரீமியர் லீக் ஓகஸ்ட் 28ஆம் திகதி ஆரம்பம்



இலங்கையில் முதல் தடவை நடைபெறவுள்ள 'லங்கன் பிரீமியர் லீக்' ரி - 20 கிரிக்கெட் போட்டிகளை எதிர்வரும் ஓகஸ்ட் 28ஆம் திகதி முதல் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, லங்கன் பிரீமியர் லீக் போட்டிகள் ஓகஸ்ட் 28ஆம் திகதி முதல் செப்டெம்பர் 20ஆம் திகதி வரை, இலங்கையிலுள்ள 4 சர்வதேச மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

23 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரின் போட்டிகள் ஆர்.பிரேமதாஸ, ரங்கிரி தம்புள்ளை, கண்டி பல்லேகலை, அம்பாந்தோட்டை சூரியவெவ மஹிந்த ராஜபக்ஷ ஆகிய மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

இந்த போட்டித் தொடரில் 5 அணிகள் பங்கேற்கவுள்ளன. கொழும்பு, கண்டி, தம்புள்ளை, காலி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களை அடிப்படையாகக் கொண்டு அவ்வணிகளின் பெயர்கள் அமையவுள்ளன.

இப்போட்டித் தொடரில் பங்கேற்க, 70இற்கும் மேற்பட்ட சர்வதேச வீரர்கள் மற்றும் 10 இற்கும் மேற்பட்ட முன்னணி சர்வதேச பயிற்சியாளர்கள் முன்வந்துள்ளனர். அவர்களுடன் இலங்கை தேசிய அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து வீரர்களும் இணைவார்கள்.

போட்டிகளுக்கான வீரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏலத்துக்கான செயற்பாடுகள் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir

# சுமந்திரன் ஒரு சாதாரண எலி அவர் ஒன்றும் புலி கிடையாது

## சாதாரன சட்டத்தரனிக்கு ஏன் இவ்வளவு பெரிய பிம்பம் எனக் கேட்கிறார் சுகாஷ்

சுமந்திரன் என்பது பெரிய பருப்புக் கிடையாது. அவர் ஒரு சாதாரண எலி. அவர் ஒன்றும் புலி கிடையாது. சுமந்திரன் என்ற சாதாரண சட்டத்தரனிக்கு ஏன் இவ்வளவு பெரிய பிம்பத்தை கொடுக்கின்றீர்கள் என உண்மையில் எனக்கு புரியவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும், நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளரும், சட்டத்தரணியுமான கனகரட்னம் சுகாஸ் தெரிவித்துள்ளார்.

'காலைக்கதிர்' பத்திரிகையின் தேர்தல் வியூகம் பகுதிக்கு வழங்கிய செவ்வியின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவருடனான செவ்வியின் போது, கேட்கப்பட்ட கேள்விகளும், அவரது பதில்களும் வருமாறு :

**கேள்வி:-** முன்னணியின் வெற்றி வாய்ப்பு எப்படியிருக்கிறது?

**பதில்:-** இந்த முறை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வெற்றி வாய்ப்பு மிகப் பிரகாசமாக உள்ளது. 2010ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் போட்டியிட்ட போது வெறுமனே 6,500 வாக்குகளையே பெற்றிருந்தோம். 2015ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் 15, 000 வாக்குகளையும், 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் ஒரு லட்சம் வாக்குகளையும் பெற்றிருந்தோம். இந்தத் தேர்தலில் எமக்கான அங்கீகாரம் கிடைக்கும். அதற்கான களச் சூழல் காணப்படுகின்றது.



* சுயேச்சை குழுக்களை விலக்குங்கள்!
* சிங்களப் பேரினவாதக் கட்சிகளை நிராகரியுங்கள்!
* போலித் தேசியம் பேசும்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் வெளியேற்றுங்கள்!
* ஏமாற்று அணியான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியையும் கணக்கில் எடுக்காதீர்கள்!
* நேர்மையாகச் செயற்படும் எமக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்!

**கேள்வி:-** தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்த முறை எத்தனை ஆசனங்களைக் கைப்பற்றும் என எதிர்பார்க்கின்றீர்கள்?

**பதில்:-** எத்தனை ஆசனங்களைக் கைப்பற்றுவோம் என்பதை விட குறைந்த பட்சம் 10 முதல் 15 ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டும் என எதிர்பார்கின்றோம். அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் கடந்த தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களை பெற்று அதனை வீணடித்திருந்தது போல் வீணடிக்காமல் 16 ஆசனங்களை பெற்று எவற்றை சாதிக்க முடியும் என்பதைச் சர்வதேசத்துக்கும், கூட்டமைப்புக்கும், போலித் தேசியம் பேசுபவர்களுக்கும் காட்ட வேண்டுமாக இருந்தால் எமக்கு 10 தொடக்கம் 15 ஆசனங்கள் தேவைப்படுகின்றன. குறித்த ஆசனங்கள் எமக்கு கிடைக்குமாக இருந்தால் நிச்சமாக பலமான பேரம் பேசும் தரப்பாக நாம் இருப்போம்.

**கேள்வி:-** எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் எவ்வாறான நடவடிக்கைளை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளீர்கள்?

**பதில்:-** அரசியல், பொருளாதார, கலாச்சார, பண்பாட்டு, ரீதியாகப் பல திட்டங்கள் எங்களிடம் இருக்கின்றன. அரசியல் ரீதியாக இலங்கையில் நடந்த இனப்படு கொலைக்கான சர்வதேச விசாரணைகளை மேற்கொண்டு குறைந்த பட்சம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தலுக்கான நடவடிக்கை எடுத்தல் போன்ற பல திட்டங்களை வைத்திருக்கிறோம்.

பொருளாதார ரீதியாக எங்களுடைய கொள்கை தற்சார்பை அடிப்படையாக கொண்டது. கடல், விவசாய தளத்தின் மூலம் உச்சப்பயனை பெறல். பனை, தென்னைத் தொழிற்சாலைகளை உருவாக்குதல். புலம்பெயர் நிதிப்பங்களிப்பின் மூலம் தாயகத்தில் தொழிற்சாலைகளை நிறுவி எம்மவர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல். சமூகம் சார்ந்த திட்டங்களாக மாவீரர் குடும்பங்களுக்கும், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும், முன்னாள் போராளிகளுக்கும் முக்கியத்துவமளித்தல். சாதி, மத, பேதங்களை ஒழித்தல் போன்ற பல்வேறான திட்டங்களையும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

**கேள்வி:-** தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட வேட்பாளர்களில் தலைவரும் செயலாளருமே முன்னிலைப்படுத்தப்படுகின்றனர் என்ற விமர்சனம் உண்டு. அது தொடர்பாக உங்கள் கருத்து?

**பதில்:-** தலையிருக்க வால்கள் ஆடக்கூடாது. எங்கயுமே தலைகள் தலைகளாக இருக்க வேண்டும். வால்கள் வால்களாக இருக்க வேண்டும். எங்களுடைய திட்டம் தலைவர், செயலாளர் உட்பட பலரை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும். கட்சியின் கொள்கையை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டுமாக இருந்தால் சர்வதேச சட்டங்களில் பாண்டித்தியம் பெற்ற கஜேந்திரகுமார் போன்ற விற்பன்னர்களும் கஜேந்திரன் போன்ற கொள்கைப்பற்று மிக்க செயற்பாட்டாளர்களும் மிக முக்கியம்.

**கேள்வி:-** தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய வாக்கு வங்கி எவ்வாறு காணப்படுகின்றது?

**பதில்:-** தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு கிடைக்கும் வாக்குகள் கொள்கைக்கு கிடைக்கின்ற வாக்குகளாகும். தேசியத் தலைவர் பிரபாகரன் எந்த நோக்கத்துக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினாரோ அந்த நோக்கத்தில் இருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு விலகியதால் அந்த கொள்கையைக் கொண்டு செல்கின்ற தரப்பாக நாம் இனம் காணப்பட்டோம். எங்களுடைய வாக்கு வங்கி சீரான வேகத்தில் அதிகரித்து வருகின்றது.

**தேர்தல் வியூகம்**

செவ்வி கண்டவர்கள் :
பி.டிலக்ஸன்
இ.கலையமுதன்

**கேள்வி:-** தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரசாரக் கூட்டங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடைய பெயரையும் தொடர்ச்சியாக உச்சரிப்பாதாக குற்றம்சாட்டப்படுகிறதே?

**பதில்:-** உண்மைகளைச் சொல்கிறோம். அவை பலருக்கு விமர்சனங்களைக் கொண்டுவரலாம். நாங்கள் பொய்யான விமர்சனங்களையோ பொய்யான அவதூறுகளைப் பரப்புவது கிடையாது.

**கேள்வி:-** கூட்டமைப்புக்கு மாற்றீடாக தமிழ் மக்கள் மக்கள் கூட்டணி நான்கு கட்சிகள் கூட்டணியாக போட்டியிடுகின்ற நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எவ்வாறு தனிக் கட்சியாக மாற்று அணி என்று நின்று பிடிக்கப் போகிறது?

**பதில்:-** விக்னேஸ்வரனுடைய கூட்டணி ஒவ்வொரு நபர்கள் இருக்கின்ற சில – பல கட்சிகளின் கூட்டணி. எங்களுடைய அணி மாத்திரமே கொள்கைக் கான அணியாக இருக்கிறது. அவர்கள் கொள்கை யற்ற தேர்தலுக்கான கூட்டணி. இங்கு கூட்டணியா, தனிக்கட்சியா என்பது முக்கியமில்லை. எவர் தமிழ்த் தேசியக் கொள்கையினை தாங்கிச் செல்கிறார் என்பதே முக்கியமானது. யார் மாற்று அணி என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

**கேள்வி:-** கிழக்கில் தமிழ் கட்சிகள் பிரிந்து போட்டியிடுவதால் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதில் ஏன் நீங்கள் விட்டுக் கொடுப்புகளைச் செய்யவில்லை?

**பதில்:-** இந்தக் கேள்வியை தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் கேட்டிருக்கலாம். அல்லது நேற்று கட்சியை ஆரம்பித்த விக்னேஸ்வரன் ஐயாவிடம் கேட்டிருக்கலாம். தேசியத் தலைவரின் கொள்கையில் பயணிப்பது எங்கள் கட்சி மட்டுமே. நாங்கள் ஒரு போதும் தமிழ்க் கட்சிகளை ஒன்று படுத்த முடியாது. ஏனென்றால் ஒவ்வொருவருக்கும் ஒரு நிகழ்ச்சி நிரல் உள்ளது.

2010 நாடாளு மன்ற தேர்தலில் வெறும்6 ஆயிரம் வாக்குகள்.

2015 நாடாளு மன்ற தேர்தலில் 15 ஆயிரம் வாக்குகள்.

எங்கள் வளர்ச்சி சீரானது. மக்கள் எங்களை நிராகரித்தார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

2018 உள்ளூராட்சித் தேர்தலில் ஒரு லட்சம் வாக்குகள்

**கேள்வி:-** தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உருவாக்கப்பட்டு 10 வருடங்களைக் கடந்தும் ஏன் கட்சியாகப் பதிவு செய்யப்படவில்லை?

**பதில்:-** தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பது வெறுமனே அரசியல் கட்சியல்ல. அது ஒரு கொள்கைக்கான அரசியல் இயக்கம். அரசியல் இயக்கத்தைச் சட்ட ரீதியாகப் பதிவு செய்வதில் சில சட்ட சிக்கல்கள் காணப்படுகின்றன. அதற்கான நடவ டிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுடைய தீர்மானங்களுக்கு ஏற்ப பதிவு செய்வதா, இல்லையா என்பதைக் கட்சி தீர்மானிக்கும்

**கேள்வி:-** கடந்த இரு நாடாளுமன்ற தேர்தல்களிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை மக்கள் தொடர்சியாக நிராகரித்து வந்தனர். இம்முறையும் நிராகரிக்கப்பட்டால் உங்கள் நிலை என்ன?

**பதில்:-** நிராகரிக்கப்பட்டோம் என்பதனை நான் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. கட்சி ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத கால இடைவெளியில் – 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 6 ஆயிரத்து 500 வாக்குகளைப் பெற்றோம். 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 15 ஆயிரம் வாக்குகளைப் பெற்றோம். அது இரண்டரை மடங்கு வளர்ச்சி. 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றோம். இது ஐந்தரை மடங்கு வளர்ச்சி. எங்கள் வளர்ச்சி சீரானது. மக்கள் எங்களை நிராகரித்தார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

(9 ஆம் பக்கம் பார்க்க...)

# போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த உதவுமாறு வேட்பாளர்களிடம் 'யான் ஸ்ரீலங்கா' அமைப்பு கோரிக்கை!

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம், ஜூலை 28

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் வழிகாட்டலுக்கமைய, 'யான் ஸ்ரீலங்கா' இளைஞர் வலையமைப்பினால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் சில கோரிக்கைகளை முன்வைப்பதற்காகவும், கோரிக்கைகளினால் ஏற்படக்கூடிய அநுகூலங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காகவும், புகைப்பொருள், மதுசாரம் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நாட்டின் துரித அபிவிருத்தியை நோக்கிய வேலைத்திட்டம் தொடர்பாக விளக்கமளிப்பதற்காகவும், யாழ் ஊடக மன்றத்தில் நேற்று ஊடகச் சந்திப்பொன்று இடம்பெற்றது.

அந்த ஊடக சந்திப்பின் போது வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையின் விவரம் வருமாறு:-

மதுசாரம் மற்றும் புகைப்பொருள் பாவனையால் வருடாந்தம் 35 ஆயிரம் பேர் மரணத்தைத் தழுவுகின்றனர். மேலும் ஹெரோயின் போன்ற ஏனைய போதைப்பொருள் வகைகளினால் பெருமளவிலானோர் உள நோய்களுக்கு ஆளாகின்றனர். இலங்கையில் ஒரு நாளுக்கு 38 கோடி ரூபா சிகரட்டுக்காக செலவிடப்படுகின்றது. சாராயம், பியர் பாவனைக்காகத் தினமும் ரூபா 59 கோடி எமது மக்களால் செலவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலைமையில், புகைப்பொருள், மதுசாரம் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நாட்டின் துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு இம்முறை பொதுத் தேர்தலில்




களமிறங்கியுள்ள வேட்பாளர்கள் எவ்வாறான வேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்பதற்கு துறை சார்ந்த நிபுணர்கள் கீழ்காணும் 08 பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர்.

01. தனி சிகரட் மற்றும் புகைப்பொருள்களின் விற்பனையைத் தடை செய்தல்.

04. வெற்றுப்பொதியிடல் முறைமை அங்கீகரிக்கப்படல்.

03. கல்வி நிறுவனங்களிலிருந்து 100 மீற்றர்களுக்கு இடைப்பட்ட தூரத்தில் புகைப்பொருள்களின் விற்பனையைத் தடை செய்தல்.

04. புகையிலை நிறுவனத்திடமிருந்து முறையான வரி அறவீட்டுக் கொள்கையை வகுத்துக்கொள்ளல்.

05. மதுசாரம் மற்றும் புகையிலை மீதான அதிகார சபை சட்டத்திற்கு துறை சார்ந்த நிபுணர்களால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்தல்.

06. 2016 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட மதுசாரம் தொடர்பான கட்டுப்பாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

07. இலங்கையில் கஞ்சாவை சட்ட ரீதியாக்குவதற்கு இடமளிக்காமல் இருத்தல்.

08. ஹெரோயின் உட்பட ஏனைய அனைத்து போதைப்பொருள்கள் தொடர்பிலும் தற்போது காணப்படும் சட்டங்களைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துதல்.

மேற்குறிப்பிட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இலங்கையர்களின் சுகாதாரத்தையும், பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவதனூடாக நாட்டு மக்களை பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் உங்களின் - உங்களது கட்சியின் புகைத்தல் பாவனையைக் குறைப்பதற்கும், மதுசாரப் பாவனையைஜ் குறைப்பதற்கும், போதைப்பொருள் பாவனையைக் குறைப்பதற்கும் மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்களுக்கு தெரிவிப்பதற்கான வாய்ப்பு வகுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளை செயற்படுத்துமாறும், இம்முறை வேட்பாளர்களுக்கு வாக்களிக்க காத்திருக்கும் மக்கள் இது தொடர்பில் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். ஆகவே பொது மக்களின் எதிர்ப்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு வேட்பாளர்கள் முன்வர வேண்டும். - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## தனிமைப்படுத்தப்பட்டோருக்கான நடமாடும் வாக்குச்சாவடிகள் ரத்து

**தேர்தல் தினத்தில் மேலும் முப்பது நிமிடங்களை இறுதி நேரத்தில் வழங்க யோசனை முன்மொழிவு**

கொழும்பு, ஜூலை 28

தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு, தனியாக ஏற்பாடு செய்வதாக தெரிவிக்கப்பட்டிருந்த நடமாடும் வாக்களிப்பு நிலையங்கள் முன்னெடுக்கப்படாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய, வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு ஜூலை 31ஆம் திகதியன்று, நடமாடும் வாக்குச்சாவடிகளை ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆயினும், இதில் ஒரு சில நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதனால் அதனை முன்னெடுக்க முடியாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான சந்திப்பைத் தொடர்ந்து, இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா நோயாளிகளாக வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரின் உரிமை தொடர்பில் எழுந்த கேள்வியை அடுத்து இந்தத் திட்டம் இடைநிறுத்தப்பட்டது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ரட்னஜீவன் ஹூல் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்-

வாக்காளர்கள் உத்தியோகபூர்வ வாக்குச் சாவடிகளிலேயே வாக்களிக்க வேண்டும் எனத் தேர்தல் சட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதால், தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பின் மூலம், கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் உரிமை மீறப்படுவதால், ஆணைக்குழு இதனை ஆழமாக மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக, ஏற்கனவே 4 மணியிலிருந்து 5 மணியாக ஒரு மணித்தியாலத்துக்கு நீடிக்கப்பட்ட வாக்களிப்பு நேரம் மேலும் 30 நிமிடங்கள் நீடித்து, தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்க முன்மொழிவொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த வாக்காளர்கள், சுகாதார அமைச்சால் முற்கூட்டிய அனுமதியைப் பெற்று, அவர்களுக்குரிய வாக்குச்சாவடியில் வாக்களிக்க முடியும். இதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்க வேண்டும்.

எவரொருவரும் வாக்குச் சாவடிக்கு வந்து தமது வாக்கை அளிப்பதற்கு தடை விதிக்க முடியாது.

இவ்விடயங்கள் தொடர்பில், கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது - என்றார்.

## கொரோனாக் கால நிவாரணத்துக்கு உரிமை கோரிய அரசியல்வாதி பற்றிய விசாரணைக்கு நடந்தது என்ன?

**தேர்தல் ஆணையச் சந்திப்பில் ஈ.பி.டி.பி. கேள்வி**

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்ஜூலை 28

கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில், யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அரச நிவாரண விநியோகத்தை அரசியல்வாதி ஒருவருக்கு வழங்கியதாக வெளிவந்த செய்தி தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணைக்கு என்ன நடந்தது? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? - எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

எதிர்வரும்ஓகஸ்ட் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் குறித்து ஆராய்வதற்காகக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்றுக்காலை 10.30 மணிக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றது. இதன் போதே இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

"இது தொடர்பில் உரிய முறைப்படி - ஒழுங்கு முறையில் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. தற்போதுவரை இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையில் விடயத்தைப் பொலிஸாரிடம் பாரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதோடு, வேறு சில நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

"இதேநேரம், மேலும் சில விடயங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாவட்டச் செயலகத்திலும், பிரதேச செயலகங்களிலும் முறைப்பாட்டு அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களாக வேறு மாகாணங்களைச் சேர்ந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டு சந்தேகத்துக்கு அப்பாலான செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

"இதேநேரம் - எதிர்வரும் 3ஆம் , 4ஆம் திகதிகளில் விளம்பரங்கள், கூட்டங்கள் நடத்த முடியாது. இருப்பினும் இரு நாள்களிலும் , மாவட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி வாக்களிப்பு நிலையமுகவர்களாகக் கட்சிகள் நியமிக்கவுள்ளவர்களுக்கு மட்டும் கூட்டம் நடத்த முடியும் எனத் தவிசாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிலமைகளைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழுவால் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டபோதும் அது ஏன் பின் வாங்கப்பட்டது என ஈ.பி.டி.பி. சார்பில் கலந்துகொண்ட சி.தவராசா கேள்வி எழுப்பினார்.

அரசியல்வாதி ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டினால் யாழில் பணியாற்ற விரும்பாது அந்த அதிகாரி திரும்பியுள்ளார். இருப்பினும் யாழ்ப்பாணத்திற்கு இன்னும் விசேட ஏற்பாடுகள் தொடரும் எனத் தவிசாளர் பதிலளித்தார்.

ஓர் அரசியல்வாதி எனத் தெரிவிக்காது பெயரைக் கூறுங்கள், ஏனெனில் இதே மொகமட் தேர்தல் பெறுபேற்று அதிகாரியாகச் செயல்பட்டபோது, தற்போது முறையிட்ட அதே அரசியல்வாதி ஒரு லட்சத்து 32 ஆயிரம் வாக்குகள் பெற்றார் என அறிவிக்கப்பட்டது என்பதையும் சி. தவராசா சுட்டிக்காட்டினார்.

## சுமந்திரன் ஒரு....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**கேள்வி:-** சுமந்திரனை நேருக்கு நேர் எதிர்கொள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி பயப்பிடுகிறதா?

**பதில்:-** சுமந்திரன் என்ற சாதாரண சட்டத்தரணிக்கு ஏன் இவ்வளவு பெரிய விம்பத்தை கொடுக்கின்றீர்கள் என உண்மையில் எனக்கு புரியவில்லை. சுமந்திரனைப் பார்த்து பயப்படுகின்ற அளவிற்கு நாங்கள் இல்லை. அரசியல் அனுபவத்திலும் சட்டப் புலமையிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு கிட்டவும் நிற்க முடியாத நபரே அவர். சுமந்திரன் என்பது பெரிய பருப்புக் கிடையாது. அவர் சாதாரண எலி.அவர் ஒன்றும் புலி கிடையாது.

**கேள்வி:-** மக்களுக்கு சொல்ல விரும்புவது?

**பதில்:-** இம்முறையும் ஏமாந்துவிடாதீர்கள். சுயேச்சை குழுக்களை முற்று முழுதாக நிராகரியுங்கள். சிங்களவாத பேரினவாதக் கட்சிகளை முற்றுமுழுதாக நிராகரித்து, போலித் தேசியம் பேசுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினையும், ஏமாற்று அணியாக இருக்கக்கூடிய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியையும் கணக்கில் எடுக்காமல் கொள்கைக்காகக் கடந்த பத்தாண்டுகளாக நேர்மையாகச் செயற்பட்டு வருகின்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். விலை போகாத தலைமைத்துவத்தினை வழங்கத் தயாராக உள்ளோம்.

காலைக்கதிர் Kalaikkathir

# மாதிரி வாக்குச்சீட்டில் கூட்டமைப்பு மோசடி மாம்பழம் சின்னத்துக்குப் பதில் வாழைப்பழம்

## 'மாம்பழம்' ஐங்கரநேசன் குற்றச்சாட்டு








தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர் சரவணபவனின் பெயரில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டு வரும் மாதிரி வாக்குச்சீட்டுகளில் எங்களது சுயேச்சைக்குழு – 8 இன் மாம்பழம் சின்னத்துக்குப் பதிலாக வாழைப்பழச் சின்னத்தை அச்சிட்டு மோசடியான முறையில் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமான பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சை அணியாக மாம்பழம் சின்னத்தில் போட்டியிடுகின்றது. இவர்களது தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றபோதே பொ.ஐங்கரநேசன் வாக்குச்சீட்டு மாதிரிகளையும் காண்பித்து இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

சுயேச்சைகளுக்கு வாக்களிக்க வேண்டாம், அந்த வாக்குகள் வீணாகிவிடும் என்று பெருங்கட்சிகளின் வேட்பாளர்கள் மேடைக்கு மேடை பேசி வருகிறார்கள். நான் மதிக்கின்ற விக்னேஸ்வரன் ஐயா கூட அவ்வாறு பேசியிருக்கிறார். அவரது கட்சியும் அவரது கூட்டில் இணைந்திருக்கின்ற அனந்தி அம்மையார், ஸ்ரீகாந்தா அவர்களது கட்சிகள் கூட இன்னும் தேர்தல் ஆணையத்தில் கட்சிகளாகப் பதியப்படவில்லை. நாங்கள் பதிவுக்காக தேர்தல் ஆணையத்தில் விண்ணப்பித்திருப்பதைப் போலவே அவர்களும் விண்ணப்பித்திருக்கிறார்கள். வேறொரு கட்சி தனது பெயரை மாற்றிய பின்னர் அதனுடன் இணைந்து போட்டியிடுகின்ற இவர்கள் அந்தக் கட்சி பெயரை மாற்றாமல் இருந்திருந்தால் சுயேச்சைகளாகத்தான் இந்தத் தேர்தலை எதிர்கொள்ளவேண்டி வந்திருக்கும்.

நாங்கள் மழைக்காளான்கள் போன்று தேர்தல் காலத்தில் தோன்றி மறைகின்ற சுயேச்சைகள் அல்லர். தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இயங்கி வருகின்ற கட்சி. எங்களுக்குப் பல ஆயிரக்கணக்கான உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இருக்கிறார்கள். எங்களது பரந்த வலையமைப்பைக் கண்டு இவர்கள் அஞ்சுகிறார்கள். இதனால்தான் சுயேச்சைக் குழுக்களுக்கு வாக்களிக்காதீர்கள் என்று மேடைக்கு மேடை வேண்டுவதோடு உச்சக்கட்ட இழிநிலை அரசியலின் வெளிப்பாடாக மாதிரி வாக்குச் சீட்டில் வாக்காளர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் நோக்கோடு மாம்பழம் சின்னத்தை நீக்கி வாழைப்பழத்தை அச்சிட்டு விநியோகிக்கிறார்கள்.

ஐந்து வீதத்துக்குக் குறைவாக எடுக்கக்கூடிய கட்சிகளுக்கும் வாக்களிக்காதீர்கள் என்று மன்றாடுகிறார்கள். கிடைக்காது என்று எதிர்வுகூறுவதற்கு இவர்கள் என்ன சோதிடர்களா? இவர்கள் எத்தகைய விசமப் பிரச்சாரத்தில் ஈடுபட்டாலும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இந்தத் தேர்தலில் கணிசமான அளவு வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும். மாம்பழம் சின்னத்துக்கு போடுகின்ற உங்கள் வாக்குகள் ஒருபோதும் வீண்போகாது என்று உறுதிபடக் கூறுகிறேன். – என்றும் தெரிவித்தார்.

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் செங்கலடிப் போராட்டத்துக்குத் தடை

## நீதிமன்றம் மூலம் பொலிஸ் நடவடிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 28

மட்டக்களப்பு செங்கலடியில் நேற்று (திங்கட்கிழமை) காலை வடக்கு,கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்தவிருந்த போராட்டம் பொலிஸார் நீதி



மன்றின் ஊடாக பெறப்பட்ட தடையுத்தரவினால் இடைநிறுத்தப்பட்டது.

வடகிழக்கில் உள்ள வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பினர் இணைந்து செங்கலடி சந்தியில் நேற்றுக் காலை கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

யாழப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய எட்டு மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இந்த போராட்டங்களை முன்னெடுக்கவிருந்தனர்.

தற்போது தேர்தல் நிலைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் தமிழ் தேசியத்திற்கும் தமிழர்களின் பிரச்சினைக்கு ஆதரவாகவும் செயற்படுவோரை தெரிவுசெய்யவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லும் வகையிலும் இந்த போராட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன..

இந்த நிலையில் நேற்றுக் காலை செங்கலடியில் வடகிழக்கின் எட்டு மாவட்டங்களில் இருந்து வருகை தந்த – காணாமல் போனவர்களின் உறவினர்கள் –ஒன்று கூடிய நிலையில் அங்கு வந்த பொலிஸாரும் புலனாய்வுத்துறையினரும் அந்தப் போராட்டத்தை நடத்த முடியாது எனத் தெரிவித்தனர்.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. பொலிஸார் நீதிமன்றத் தடையுத்தரவினைக் காட்டிப் போராட்டம் நடத்த முடியாது எனத் தெரிவித்தனர்.

ஏறாவூர் நீதிவான் நீதிமன்றம் ஊடாக இந்தத் தடையுத்தரவு ஏறாவூர் பொலிஸாரினால் பெறப்பட்டிருந்தது.

தாம் போராட்டம் நடாத்துவதற்கு சில தினங்களுக்கு முன்பாகவே அது குறித்து சுகாதார பிரிவினருக்கும் பொலிஸாருக்கும் அறிவித்திருந்தனர் எனவும் ஆனால் பொலிஸார் திட்டமிட்டு தமது போராட்டத்தினை முடக்கியுள்ளனர் எனவும் காணாமல்போனோ ரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கிருந்து கலைந்து சென்ற காணாமல்போனோர் சங்க உறவினர்கள் மட்டக்களப்பில் உள்ள மட்டு. ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றினையும் நடத்தினர்.

இந்த நாட்டில் ஜனநாயக விழுமியங்களின் நிலை இன்றே வெளிப்படுவதாகவும் எதிர்காலத்தில் இவர்கள் ஆட்சியமைக்கும் நிலையேற்பட்டால் ஜனநாயகம் முற்றாகக் குழிதோண்டி புதைக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த அரசாங்கத்தின் மீதே கடத்தல், காணாமல் போகச் செய்தல் தொடர்பான குற்றச்சாட்டுகள் அதிகமாக காணப்படுவதனால் அதனை மூடிமறைப்பதற்காக தம் மீதான இந்த அடக்கு முறை பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவித்துள்ளனர்.

# நாடளவில் அமுலிலுள்ள சுகாதார வழிகாட்டல்களை நல்லூர் திருவிழாவில் உறுதிப்படுத்த ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை28

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் திருவிழாவில் நாடளவில் அமுலிலுள்ள சுகாதார வழிகாட்டல்களையும் நடைமுறைகளையும் உரியமுறையில் பின்பற்ற வேண்டுமென வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கேட்டுக்கொண்டார்.

வடமாகாண மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடலொன்று வடமாகாண ஆளுநர் தலைமையில் நேற்று சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார திணைக்கள அதிகாரிகளுடன் ஆளுநரின் செயலகத்திலுள்ள கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

மாகாணத்தில் இடம்பெற்றுவரும் போதைப்பழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது தொடர்பில் ஆளுநர் வழிகாட்டலுக்கு அமைவாக போதைப்பொருள் மறுவாழ்வு நிலையம் அமைப்பது தொடர்பாகவுள்ள நடைமுறைப் பிரச்சினைகள் மற்றும் அதற்கான திட்டமிடல்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

அவ்விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்திய ஆளுநர் கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக தற்காலிகமாக மூடப்பட்ட நிலையிலுள்ள பாடசாலை ஒன்றை அடையாளம்கண்டு அதனை மறுவாழ்வு மையமாக மாற்றலாம் எனக் கூறினார்.

போதைப்பொருள் வைத்திருப்பவர்களைக் கைதுசெய்தால் அவர்களை மறுவாழ்வு மையத்திடம் கையளிப்பது தொடர்பிலுள்ள சட்டரீதியான பிரச்சினைகளைப் பற்றிய அறிக்கையைத் தாமதமின்றி தயாரித்துத் தன்னிடத்தில் கையளிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவ்விடயங்கள் தொடர்பாகத் தான் அமைச்சரவை மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும் நல்லூர் திருவிழாவில் நாடளவில் அமுலிலுள்ள சுகாதார வழிகாட்டல்களையும் நடைமுறைகளையும் உரியமுறையில் கடைபிடித்து கொரோனா தொற்றுப்பரவலில் இருந்து சமூகத்தை காப்பாற்ற வேண்டிய நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

நேர அட்டவணை தயார் செய்து அதனடிப்படையில் பூஜைகளை நடத்தலாம் என்றும் எமது மாகாணக் கோவில்களில் சுகாதார விதிமுறைகள் மீறப்படுவதைத் தான் விரும்பவில்லை என்றும் குறிப்பிட்ட ஆளுநர் தேவைப்பட்டால் பொலிஸ் உதவியை நாடி மக்களைக் காப்பதற்கான அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

# தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை அடக்க முடியாது என்பதை நிரூபிப்போம்!

## வாக்குகள் மூலம் அதைச் செய்து காட்ட அழைக்கிறார் சட்டத்தரணி சிறீகாந்தா

கிளிநொச்சி,ஜூலை28

தமிழினத்தினுடைய விடுதலைப் போராட்டம் அடக்கப் பட முடியாதது என்பதை நடைபெறவுள்ள பொதுத்தேர்த லில் வாக்குச்சீட்டுக்கள் மூலம் தமிழ் மக்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்.மாவட்ட வேட்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியு மான ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்றுவித்தது, தலைவர் பிரபாகரனு டைய ஆதரவோடு கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது என்றெல்லாம் கூறி கூட்டமைப்புத் தலைவர்கள் இப்போது வாக்குக் கேட்கின்றார்கள்

கடந்த வருடம் மார்கழி மாதம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தமிழரசுக் கட்சியின் நிகழ்விலே சம்பந்தன் சொன் னது என்ன? தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிப்பட்டது நல்ல விடயமாக இருக்கலாம் என்று சம்பந்தன் பேசினார். இராஜவரோதயம் சம்பந்தனுக்கு அது நல்ல விடயம்தான்.



இந்த நல்ல விடயத்தில் என்னவெல்லாம் நடந்தேறின என்பது எமது மக்களுக்குத் தெரியும்

குண்டு வீச்சுக்கள், கொலைகள், சிதைவுகள், அழிவுகள், இடப்பெயர் வுகள் என்ற விடயங்கள் இருந்தன. எமது மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட சம்பவங்கள் இருந்தன. குழந்தைகள் கருக்கப்பட்ட நிகழ்வுகள் இருந்தன. எல்லாவற்றுக்கும் மே லாக ஒன்றரை இலட்சம் மக்கள் கொல் லப்பட்ட சோகம் இருந்தது. இவற்றை எல்லாம் தெரிந்துகொண்டும் தனது சிங்கள எஜமானர்களைத் திருப் திப்படுத்த சம்பந்தன் இவ்விதம் கூறி னார். ஒரு பொறுப்புள்ள தலைவர் பேசுகின்ற பேச்சா இது?

சமீபத்திலே சுமந்திரன் என்ன சொன்னார்? ஆயுதப் போராட்டத்தைத் தான் ஆதரிக்கவில்லையென ஒரு சிங்கள ஊடகத்துக்குப் பெருமை மிக்க ஒரு தமிழனாக அவர் தெரிவித் தார். இவர்கள் எல்லாம் தமிழ்த் தேசி யம் பேசுவதற்குத் தகுதி உள்ளவர்களா?

நல்லாட்சி அரசின் நாலரை வருட ஆட்சிக் காலத்தில் கூட்டமைப்பு நேர்மையாகச் செயற்பட்டிருந்தால் தமிழ் அரசியல் கைதிகளில் மிகப் பெரும்பான்மையினரை விடுவித்திருக்க முடியும். மகாவலி திட்டத்தின் ஊடாக வந்த சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தி யிருக்க முடியும். வரலாற்று சிறப்புப் புகழ்மிக்க கோனேஸ் வரர் ஆலயத்துக்கும் வன்னியிலுள்ள ஆலயங்களுக்கும் விடுக்கப்படுகின்ற சவால்களை உடைத்தெறிந்திருக்க முடியும். ஆனால் செய்யவில்லை.

அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நல்ல பிள்ளைகளாக நடந்து கொண்டார்கள்.

புதிய அரசியல் சாசனம் தொடர்பாக இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். நீங்கள் எல்லோரும் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்கிறீர்கள் தானே? என்பதுதான் அந்தக் கேள்வி. கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் எவரும் அப்போது வாயைத் திறக்க வில்லை. இவர்கள்தானா எமது மக்களுக்காகக் குரல் எழுப்பக்கூடியவர்கள்?

இவர்கள் தங்கள் சொந்த நலன்களை தமது அரசியல் நடவடிக்கைகளோடு கலந்து விட்டிருக்கின்றனர். பலருக்கு இது ஒரு தொழிலாகி விட்டது. வேறு பலருக்கு ஓர் அந்தஸ்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கொடுத்தி ருக்கின்றது. தமிழ் மக்களுடைய தலைவர்கள் பொறுப் புள்ளவர்களாக – விலை போகாதவர்களாக – இருக்க வேண்டும்.

நாங்கள் ஆயுதப் போராட்டத்தில் தோற்கடிக்கப் பட்டிருக்கலாம். வெளிநாடுகளின் உதவியோடு எமது ஆயுதப்போராட்டம் அடக்கி ஒடுக்கி நசுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், தமிழினத்தினுடைய விடுதலைப் போராட்டம் அடக்கப்பட முடியாதது என்பதை நீங்கள் எதிர்வரும் தேர்தலில் உங்கள் வாக்குச்சீட்டுக்கள் மூலம் நிரூபித்துக் காட்ட வேண்டும் – என்றார்.

## அராலி கிழக்கில் கூரை பிரித்துத் திருட்டு; 6 பவுண் தாலிக் கொடி 12 மணி நேரத்தில் மீட்பு

### வட்டு. பொலிஸார் மோப்ப நாயுடன் துரித செயற்பாடு

(ந.லோகதயாளன், நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் , ஜூலை 28

அராலி கிழக்கில் நேற்று அதி காலை களவாடப்பட்ட 6 தங்கப் பவுண் தாலிக்கொடி திருட்டுப் போய் 12 மணி நேரத்துக்குள் மீட்கப்பட்டமையுடன் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள் ளார் எனவட்டுக்கோட்டைப்பொலி ஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை பொலிஸா ரின் துரித விசாரணையின் அடிப் படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனக் கூறப்பட் டது.

கிளிநொச்சி 13ஆம் கட்டை யைச் சேர்ந்தவரே கைது செய்யப் பட்டுள்ளார்.

"அராலி கிழக்கில் வீடொன் றில் நேற்று அதிகாலை 6 தங்கப் பவுண் தாலிக்கொடி திருட்டுப் போயுள்ளதாக முறையிடப்பட் டது.

அந்த வீட்டில் வசிப்பவர்கள் அண்மையில் உள்ள உறவினர் வீடொன்றில் நேற்று முன்தினம் தங்கி நேற்று காலை வீடு திரும் பிய போது, வீட்டின் கூரை பிரித் துக் காணப்பட்டுள்ளது. வீட்டின் அறையில் வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடியும் திருட்டுப் போயி ருந்தமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத் தில் அந்த வீட்டின் குடும்பப்பெண் முறைப்பாடு வழங்கினார்.

அவரது முறைப்பாட்டின் படி முன்னெடுக்கப்பட்ட விசாரணை களில் வீட்டின் கூரைப்பகுதியில் திருட்டில் ஈடுபட்டவரின் சேட் துணி ஒருதுண்டு மற்றும் சிலதடயங்கள் கிடைத்தன. அவற்றின் அடிப் படையில் மோப்பநாயின் உத வியுடன் அண்மையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்தவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து திருடப்பட்ட நகையும் கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர் இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத் தப்படுவார் – என்று பொலிஸார் கூறினர்.

## வவுனியாவில் மரக்காலையில் திடீரெனத் தீ!

வவுனியா - பன்றிக்கெய்தகுளம் பகுதியில் மரக்காலை ஒன்று நேற்று அதிகாலை 3 மணிய ளவில் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த நகரசபைத் தீய ணைப்புப் படைப்பிரிவினால் தீ கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வரப்பட்டதுடன், பாரிய சேதமும் தடுக்கப்பட்டது.

இதன்போது, பெறுமதியான மரப் பலகைகள் தீக்கிரையாகியுள்ளன. சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர்.

## கசூறினாக் கடலில் மூழ்கி உயிரிழப்பு

காரைநகர் கசூரினா கடற் கரையில் வயோதிபர் ஒருவர், நேற்றுமுன்தினம் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குடும்பத்துடன், குளித்துக் கொண்டிருந்த போதே, கல்லில் சறுக்கி வீழ்ந்து, அவர் நீரில் மூழ்கினார் என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர், இளவாலை – பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த சென்ஜோன் பெனடிக் (வயது 69) என்பராவார்.

## மட்டக்களப்பில் இந்த முறை முதல் தடவையாக இரண்டு பிரதான வாக்கெண்ணும் நிலையங்கள்

மட்டக்களப்பில் இம்முறை பிரதான வாக்கெண்ணும் நிலையங்கள் இரண்டு அமைக்கப்படவுள்ளன என மாவட் டத் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்டச் செயலாளரு மான கலாமதி பத்மராஜா தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, மகா ஜனக் கல்லூரி ஆகியவை பிரதான வாக்கெண்ணும் நிலை யங்களாக அமையப் பெறவுள்ளன.

இவற்றில் கல்குடா தேர்தல் தொகுதியில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ணுவதற்காக 15 வாக்கெண்ணும் பிரிவு களும், மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ணுவதற்காக 33 வாக்கெண்ணும் பிரிவு களும், பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ணுவதற்காக 12 வாக்கெண்ணும் பிரிவு களும், தபால்மூல வாக்குகளை எண்ணுவதற்காக 07 வாக் கெண்ணும் பிரிவுகளுமாக மொத்தம் 67 வாக்கெண்ணும் பிரிவுகள் அந்தப் பிரதான வாக்கெண்ணும் இரு நிலை யங்களிலும் இயங்கவுள்ளன.

வாக்கெண்ணும் பணிகளுக்காக 67 பிரதான வாக் கெண்ணும் அலுவலர்களும், 274 தெரிவத்தாட்சி உதவி அலுவலர்களும், 449 சிரேஷ்ட தலைமைதாங்கும் அலு வலர்களும், 620 வாக்கெண்ணும் கனிஷ்ட தலைமைதாங் கும் உத்தியோகத்தர்கள் மற்றும் எழுதுவினைஞர்களும், 67 சுகாதார வழிகாட்டல் உத்தியோகத்தர்களும், 134 அலு வலக உதவியாளர்களும் அடங்கலாக 1611 உத்தியோகத்தர் கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் கடமைகளில் வாக்குப் பெட்டிகள், வாக்குச்சீட்டுக் கள் வழங்கல், பொறுப்பேற்றல் கடமைகளில் 70 தெரிவத் தாட்சி உதவி அலுவலர்களும், 120 சிரேஷ்ட தலைமைதாங்கும் உத்தியோகத்தர்களும், 140 கனிஷ்ட தலைமைதாங்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் எழுதுவினைஞர்களும், 60 சுகாதார வழிகாட்டல் உத்தியோகத்தர்களும், 60 அலுவலக உதவியாளர்களும் உள்ளடங்கலாக 450 உத்தியோகத்தர் கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இம்முறை வாக்கெண்ணும் பணிகள் தேர்தல் தினத்திற்கு மறுதினமாகிய ஓகஸ்ட் 06ஆம் திகதி காலை ஆரம்பிக்கப் படவுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பெக்கோ வாகனம் சரிந்ததில் படுகாயமுற்றவர் உயிரிழந்தார்

பாரவூர்தியில் பெக்கோ வாகனத்தை ஏற் றும் போது ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த பெக்கோ வாகன சாரதி, யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் 20 நாள்களாகச் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார். ஊர்காவற்றுறை – சுரு வில் பகுதியைச் சேர்ந்த செல்வபெருமாள் பிரதீசன் (வயது 30) என்பவரே, உயிரிழந்த வராவார்.

ஜூலை 6ஆம் திகதி பெக்கோ வாகனத்தை பாரவூர்தியில் ஏற்றி பிறிதோர் இடத்துக்கு எடுத்து செல்ல முற்பட்ட போது பெக்கோ வாக னம் சரிந்துள்ளது. இதனால் செயினுக்குள் அகப்பட்டு கொண்ட சாரதி காயங்களுக்குள் ளாகி தெல்லிப்பளை ஆதார வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதி க சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## நாடாளுமன்றத் தேர்தல் - 2020

**எமது கிளிநொச்சி மாவட்ட வாக்காளப் பெருமக்களே!**
**உங்களிடம் நான் உரிமையுடன் கேட்பது**
**உங்கள் வாக்குகளை கிளிநொச்சி மாவட்ட அபிவித்திக்கு வாக்களியுங்கள்!**


எமது கிளிநொச்சி மாவட்டத்தில் இயற்கை வளமோடும், செல்வச் செழிப்போடும், போரால் பாதிக்கப்பட்டு உறவுகளை இழந்து, சொல்லொனாத் துன்பத்துடனும் வாழ்ந்த பிரதேசமும் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேசமும் என்பதை நாங்கள் சிந்தித்து 2020 நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பலதுறையிலும் அபிவிருத்திகளை மேற்கொள்ள என்னால் முன்வைக்கப்படும் திட்டங்களில் சில கீழ்வருமாறு.

1. எங்களது கிளிநொச்சி மாவட்ட விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டங்களும் கடல் நீரை நன்னீராக்கி விவசாயத்துக்குப் பயன்படுத்தும் திட்டங்களும் மற்றும் பல விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விரிவான விளக்கங்களை நான் ஒரு சிறிய புத்தக வடிவில் உங்களுக்கு சமர்ப்பித்திருக்கின்றேன்.
2. அதனை பாரிய குழாய்கள் மூலம் விநியோகிக்கும் திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.
3. இரணைமடு நீர்த்தேக்கத்தின் ஒவ்வொரு துளி நீரும் வீணாகாது பயன்படுத்த ஆவன செய்தல்.
4. புதிய வகை நெல் இனங்களை அறிமுகப்படுத்தல்.
5. தொழில்முயற்சிகளுக்கு தேவையான கடன் வசதிகளைக் குறைந்த 4 வீத வட்டியில் வழங்க ஆவன செய்தல்.
6. கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பகுதிகளுக்குமான போக்குவரத்து வசதிகள் சீராக அமைத் துக் கொடுக்கப்படும்.
7. பனையில் இருந்து பெறப்படும் கள்ளை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையும் அடுத்ததாக சாராய உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலையும் அமைக்கப்படும்.
8. பனையில் இருந்து பெறப்படும் பதநீரில் பனங்கட்டித் தொழிற்சாலைகள் சீனித் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.
9. பனையில் இருந்து பெறப்படும் பனங்கிழங்கில் இருந்து உணவுகள் உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகள் நிறுவப்படும்.
10. சிறு கைத்தொழில் சாலைகள் அமைத்து, இம்மாவட்டத்தி;ன் படித்த வாலிபர்கள் யுவதி களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.
11. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல்
12. படையினர் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்கள் வாழ்விடங்களையும் காணிகளையும் மீட்டெடுத்து, மக்களை மீள்குடியேற்ற ஆவன செய்தல்.
13. புனர்வாழ்வு பெற்ற போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் சுய கைத்தொழில் பயிற்சிகளை வழங்கி தொழில்வாய்ப்பு வழங்குதல்.

கை சின்னத்துக்கும் அங்கஜன் இராமநாதன் அவர்களின் இலக்கம் 1 இற்கும் எனது வெற்றி இலக்கமாகிய இலக்கம் 5 இற்கும் வாக்களித்து உங்கள் வெற்றியை நிலைநாட்டுங்கள்!

ஆளும் கட்சியும் அடுத்த ஐந்தாண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகும் கட்சியான எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய அபிவிருத்திக்கு வித்திடுங்கள்.





'உங்கள் வாக்கு
உங்கள் உரிமை
சரியான முறையில்
வாக்களியுங்கள்!'

தமிழ்த் தேசியமும்
தமிழ்த் தாயும் வாழ்க.

## பரநிருபசிங்கம் வரதராஜசிங்கம்
## (விண்ணன்)

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

facebook.com/vinan05

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.07.2020 இல் வெளியிடப்பெற்றது.